Registered as a Newspaper

பக்கம் 06 விலை ரூபா 5.00

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி Peoples Daily

நாதம் 05 திருவள்ளுவர் ஆண்டு 2025 மாசி 19 (03.03.94) வியாழக்கிழமை ஓசை 13

## புற்றுநோயாளர் அமைப்பு வடக்கில் அமைக்க முடிவு

வடக்கு கிழக்கு புற்றுநோயாளர் அமைப்பு ஒன்றை லண்டனில் உள்ள நிறுவனம் ஒன்றின் உதவியுடன் ஆரம்பிக்கப்பட இருப்பதாக தெரியவருகின்றது. தற்போது வடக்கு கிழக்கு மாகாணங்களில் ஏற்பட்டுள்ள வைத்திய வசதி குறைவினால் புற்றுநோய் அதிகரித்து வருவதாகவும் அதனை கட்டுப்படுத்தும் வகையில் மேற்படி அமைப்பு வைத்திய வசதிகள் மற்றும் மருந்துப் பொருள்களை, மருத்துவ உபகரணங்களை இப்பகுதிக்கு பெற்றுக்கொடுப்பதோடு மேலதிக சிகிச்சைக்காக கொழும்பு மகரகம வைத்தியசாலைக்கு செல்லும் நோயாளருக்கு தங்குமிடவசதி செய்து கொடுப்பதும் இச்சங்கத்தின் நோக்கமாகவுள்ளது. தற்போது பல (6ஆம் பக்கம் பார்க்க).

# சிறிலங்காவிற்கு ஆயுதம் விற்க சீன அரசாங்கம் தீவிர முயற்சி!

## சீன உதவிப் பிரதமர் சியாங் - கெய்சன் கொழும்பு பயணத்தின் உள்நோக்கம் இதுவே

[கொழும்பு]

சிறிலங்காவிற்கு இராணுவ கனரக ஆயுதங்களையும், விமானங்களையும் விற்பனை செய்வதில் சீன அரசாங்கம் அக்கறை காட்டிவருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இதன் ஒரு கட்டமாகவே சீனாவின் வெளிவிவகார அமைச்சரும், உதவிப் பிரதம மந்திரியுமான சியாங் - கெய்சன் சிறிலங்காவிற்கு மூன்று நாள் விஜயத்தை மேற்கொண்டதாக பி. பி. ஸியின் செய்தியாளர் குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்து செய்தி வெளியிட்ட பி. பி. ஸி சீன வெளியுறவு அமைச்சரும் உதவிப் பிரதமருமான சியாங்கெய்சன் சிறிலங்காவிற்கு பொருளாதார ஒத்துழைப்பை அதிகமாக்கிக்கொள்ளவே விஜயம் செய்தார் என அதிகாரிகள் கூறியபோதிலும் சீனாவின் ஆயுத விற்பனையே இவ்விஜயத்திற்கு காரணம் எனத் தெரிவித்தது

கடந்த சில ஆண்டுகளாக சிறிலங்காவிற்கு ஆயுதங்கள் வழங்கும் நாடுகளில் சீனாமுக்கியமான ஓர் இடத்தைப் பெற்றிருந்தது. டாங்கிகள், கவசவாகனங்கள் மற்றும் சிறுரக ஆயுதங்களை சீனா சிறிலங்காவிற்கு வழங்கிவந்தது. வெகு அண்மையில் சீனா விமானங்களையும் வழங்கியிருந்தது. இதில் போர் பகுதி

டிக்காட்டியது.

சீனா தற்போது தனது ஆயுத விற்பனையை அதிகரிக்க முயல்கிறது அதிலும் முக்கியமாக தனது விமானங்களை சிறிலங்கா அதிகமாக வாங்கவே சீனா விரும்புகிறது. 1990இல் சிறிலங்கா மனிதஉரிமை மீறல்களை ஆட்சேபித்து பிரிட்டன் அதிகார பூர்வமற்ற ஓர் ஆயுதத் தடையை சிறிலங்காமேல் கொண்டுவந்தது. இதன்பின்னர் சிறிலங்கா ஆயுதங்களுக்காக சீனாவை நாடியது. எனினும் சீனாவின் ஆயுத விற்பனை சிறிலங்காவை பொறுத்தவரை அதிகரிக்காது என்றே அவதானிகள் கருதி வந்தனர்.

சீன வெளியுறவு அமைச்சரின் கொழும்பு விஜயத்தின் இறுதியில் வெளியிடப்பட்ட ( 6 ஆம் பக்கம் பார்க்க )

## மரநிழலில் கற்பது எப்படி நேற்று பரீட்சிப்பு

(யாழ்ப்பாணம்)

முதன்மை ஆசிரியர்களுக்கான கற்பித்தல் கற்கை நெறியொன்று நேற்று யாழ் கல்வித் திணைக்களத்தில் உள்ள மர நிழலின் கீழ் நடைபெற்றது.

சுமார் முப்பதிற்கு மேற்பட்ட ஆசிரியர்கள் மாமரத்தின் கீழ் இருந்து நேற்றையதினம் காலை 9 மணி முதல் 12; 30 மணிவரை இக் கற்கை நெறியினைப் பயின்று கொண்டிருந்ததை அவதானிக்க முடிந்தது.

பாடசாலை புறச் சூழலில் கல்வி கற்பதற்கான சூழ்நிலையை அமைத்துக் கொள்ள முடியும் என்பதைக்காட்டுவதே இதன் நோக்கம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## பொலிசார் வாக்களித்ததை தேர்தல் அதிகாரி ஏற்கிறார்

(கொழும்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஏறாவூர் பகுதியில் நான்கு தேர்தல் வாக்குச் சாவடிக்கு பொலிஸாரும் வேறு பல குண்டர்களும் காலை ஏழு மணிக்கு உட்புகுந்து தேர்தல் உத்தியோகத்தர்களை விரட்டி விட்டு இவர்களே வாக்குகளை வாக்குப்பெட்டியில் போட்டுவிட்டதாக தேர்தல் ஆணையாளர் ஒத்துக்கொண்டுள்ளார்.

தேர்தல் ஆணையாளர் சந்திரானந்த டி சில்வா "லங்கா தீப" பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் மேற்படி தகவலை தெரிவித்துள்ளார், இது தொடர்பாக தேர்தல் விதிகளுக்கு அமைய நடவடிக்கை எடுக்கப்படும்என உறுதியளித்துள்ளார்.

## கிழக்கில் ஏழு கிராமங்கள் தேர்தலை பகிஷ்கரிப்பு

நேற்று முன்தினம் நடைபெற்ற உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கு வெருகல் பிரதேசத்திலுள்ள 7 கிராம மக்கள் தேர்தலை முற்றுமுழுதாக பகிஷ்கரித்தனர். கிராமங்களில் உள்ள ஒரு வாக்காளர்கூட வாக்குகளை அளிக்கவில்லை. விடுதலைப்புலிகளின் வேண்டுகோளுக்கு இணங்க மக்கள் இத்தேர்தலை பகிஷ்கரித்தனர், கிராமங்களிலுள்ள ஏனைய வாக்காளரை இராணுவம் பலாத்காரமாக அழைத்துச்சென்று வாக்களிக்கும்படி வற்புறுத்தினர். மக்கள் இராணுவத்தினருக்கு அஞ்சியே வாக்களித்தனர்.

## இன அடிப்படை காணப்படுவதை தேர்தல் முடிவு காட்டுகிறது

பி. பி. ஸி. செய்தியாளர் கூறுகிறார்

## தெற்கில் பல இடங்களில் பொலிசாரால் ஆயுதங்கள் மீட்பு

(கொழும்பு)

தெற்கில் பல இடங்களிலிருந்தும் ஆயுதங்கள் மீட்கப்பட்டுள்ளன. பிலியந்தலை, நுவரேலியா, மினுவாங்கொட, நிட்டம்புவ ஆகிய இடங்களிலேயே பெருமளவு ... ரவைகள் ஒருலட்சத்து 38 ஆயிரம் ரூபா பணம் ஆகியன பொலிசாரால் கைப்பற்றப்பட்டுள்ளன. நுவரேலியாவில் கைத்துப்பாக்கி ஆறு சுற்று ரவைகள் கண்டுபிடிக்கப்பட்டன. மினுவாங்கொடையில் ... நாட்டுத் துப்பாக்கிகளும் 16 போர் துப்பாக்கி ஒன்றும் அதன் இரு ரவைகளும் கண்டெடுக்கப்பட்டன.

இவ்வாயுதங்கள் இப்பகுதிகளிலிருந்து மீட்கப்பட்டமை

## பி. பி. ஸி. செய்தியாளர் கூறுகிறார்

(கொழும்பு)

கிழக்கில் நடந்த உள்ளூராட்சி தேர்தல்களின் முடிவுகள் இப்பகுதியில் இன்னமும் இன அடிப்படையில் பிரிவுகள் இருப்பதையே காட்டுவதாக பி. பி. ஸி கொழும்பு செய்தியாளர் தெரிவித்துள்ளார்.

சிங்களவர் அதிகமாகஉள்ள பகுதிகளில் ஐ. தே. க சிங்கள வாக்குகளைப் பெற்றது தமிழர் பகுதிகளில் தமிழ்க் குழுக்கள் தமிழ்வாக்குகளைப் பெற்றன இதற்கடுத்த நிலையில் முஸ்லிம் காங்கிரஸ் வந்துள்ளது. இன அடிப்படையில் வாக்குகள் வீழ்ந்துள்ளமை பிரச்சினைகள் இன்னமும் தீரவில்லை என்பதையே காட்டுகின்றது.

ஜனாதிபதி விஜேதுங்கா இவ்வாண்டு இறுதியில் ஜனாதிபதி தேர்தலை சந்திக்கவுள்ளார். புலிகளுக்கு எதிராகவும் இலங்கையில் சிறுபான்மையினரின் பங்கு குறித்தும் தம் கடும்போக்கினால் சிங்களவரை அவர் கவர முயல்கிறார். இன அடிப்படையான பிளவை அவர் தனக்கு சாதகமாக்க முனைகிறார் இது ஆபத்தான கொள்கை மக்களின் அச்சங்களை இது தீர்க்காது எனவும் பி. பி. ஸி கொழும்பு செய்தியாளர் குறிப்பிடுகிறார்.

## கிழக்குத் தேர்தலுக்கு மதகுரு கண்டனம்

(மட்டக்களப்பு)

கிழக்கு மாகாணத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற தேர்தலை மட்டக்களப்பில் வாழும் அமெரிக்க கத்தோலிக்க மதகுரு ஒருவர் கண்டித்துள்ளார்.

இத்தேர்தல் கேலிக்குரிய ஒன்று உலகின் கண்களுக்கு இத்தேர்தலை நடத்தி இலங்கையில் அமைதி திரும்பி விட்டதாக காட்டிக்கொள்ள அரசு எடுத்த முயற்சியே என மட்டக்களப்பில் வாழும் அமெரிக்க கத்தோலிக்க மதகுருவான பாரிமில்லர் கூறினார்.

## மக்கள் அரசுமீது கொண்ட வெறுப்பை வெளிக்காட்டுகிறது

கிழக்கு மாகாணத்திலும், வவுனியா நகர சபை பகுதியிலும் நடைபெற்ற உள்ளூராட்சி தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி பதினெட்டு பகுதிகளில் ஆட்சியை மட்டுமே கைப்பற்றியதாகவும் இருபத்தி இரண்டில் ஆட்சியை எதிர்க் கட்சிகளும் சுயேட்சைக்குழுக்களும் கைப்பற்றியமை ஐக்கிய தேசியக் கட்சிமீது அப்பகுதி மக்கள் கொண்டுள்ள அவநம்பிக்கையை காட்டுகின்றது என அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

அண்மைக் காலமாக இப்பகுதி மக்கள் ஆளும் ஐக்கிய தேசியக் கட்சிமீது கொண்டிருந்த வெறுப்பை இத் தேர்தல் முடிவு காட்டுவதாகவும் ஓர் சுமுகமான நிலையில் தேர்தல் நடைபெற்று இருந்தால் முழுமையாக இக் கட்சி படு தோல்வி அடைந்து விடும் என எண்ண முடியும் என்றும் அவ் அரசியல் அவதானிகள் மேலும் தெரிவித்துள்ளனர்.

### முந்தல் பொலிஸ் நிலையத்தில்

## சோதனையின் போதே குண்டு வெடித்தது

சீருடைகளையும் ஆயுதங்களையும் எடுத்து வந்ததாகக் கருதப்படும் இருவரை சிலாபம் முந்தல் பொலிஸ் நிலைய பொலிசார் சோதனையிட்ட சமயம் குண்டு வெடிப்பு சம்பவம் இடம்பெற்றதாக தெரிவிக்கப்படுகிறது.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இச்சம்பவத்தில் 12 பேர் காயமடைந்தனர். சீருடைகள் மற்றும் ஆயுதங்கள் என்பனவற்றை எடுத்துக் கொண்டு தப்பிச் சென்றவர்கள் எனக்கருதப்படும் இரு படையினரைசோதனை செய்யும் போது இவர்களில் ஒருவர் மறைத்து வைத்திருந்த கிரனைட் வெடித்ததாகக் கூறப்படுகிறது. இதனால் அந்த இருபடையினர் மற்றும் நான்கு பொலிசார் மற்றும் பொலிஸ் நிலையம் வந்திருந்த ஆறு பேர் ஆகியோர் காயமடைந்தனர்.

---

ருந்தது, இதில் போர் பகுதிகளுக்கு படையினரை ஏற்றிச் செல்லும் போக்குவரத்து விமானங்களும் அடங்கியிருந்தன என பி, பி, ஸி, சுட்டிக்காட்டியது ... நட்டம்புவ ஆகிய இடங்களிலேயே பெருமளவு ஆயுதங்களும் ரவைகளும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

பிலியந்தலையில் ரி-56 துப்பாக்கி அதற்கான ஆறு சுற்று ... டன. மினுவாங்கொடையில் உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கிகள் இரண்டு, இரண்டுசுற்று போர் 16 ரவைகள் கைப்பற்றப்பட்டன. அத்துடன் அங்கு 5 உள் ... களிலிருந்து மீட்கப்பட்டமை அண்மைக்காலங்களில் ஜே. வி. பியினரின் நடவடிக்கைகள் அதிகரித்துள்ளமையை காட்டுவதாக பொலிசார் தெரிவித்தனர்.

## கிழக்கு உள்ளூராட்சி தேர்தல் முடிவுகள்

(கொழும்பு)

கிழக்கு மாகாணத்திலும் வவுனியாவிலும் நேற்று முன்தினம் நடைபெற்ற உள்ளூராட்சி தேர்தல் முடிவுகள் வெளியாகியுள்ளன. 40 பிரதேச சபைகளுக்கும், மாநகர, நகர சபைகளுக்கும் தேர்தல் நடைபெற்றது. இதில் மாவட்ட ரீதியாக கட்சிகள் வெற்றிபெற்ற பிரதேச சபைகளின் எண்ணிக்கையும் மாநகர, நகரசபைகளும் குறித்தவிபரங்கள்வருமாறு;

### திருகோணமலை மாவட்டம்:

இங்கு நகர சபைக்கும் 10 பிரதேச சபைகளுக்கும் தேர்தல் நடைபெற்றது.

| | |
|---|---|
| ஃ ஐ தே. க | — 07 பிரதேச சபைகள் |
| ஃ சுதந்திரக் கட்சி | — 02 பிரதேச சபைகள் |
| ஃ முஸ்லிம் காங்கிரஸ் | — 01 பிரதேச சபை |

திருமலை நகர சபையில் சுதந்திரக் கட்சி ஆதரவு பெற்ற சுயேட்சைக் குழு வெற்றிபெற்றது;

### அம்பாறை மாவட்டம்:

இங்கு நகர சபைக்கும் 15 பிரதேச சபைகளுக்கும் தேர்தல் நடைபெற்றது.

| | |
|---|---|
| ஃ ஐ. தே. க | — 08 பிரதேச சபைகள் |
| ஃ முஸ்லிம் காங்கிரஸ் | — 04 பிரதேச சபைகள் |
| ஃ சுயேட்சை I | — 01 பிரதேச சபை |
| ஃ சுயேட்சை II | — 01 பிரதேச சபை |
| ஃ சுதந்திரக் கட்சி | — 01 பிரதேச சபை |

அம்பாறையில் நகர சபையில் ஐ. தே. க வெற்றி பெற்றது;

### மட்டக்களப்பு மாவட்டம்:

இங்கு மாநகர சபைக்கும் 11 பிரதேச சபைகளுக்கும் தேர்தல் நடைபெற்றது.

| | |
|---|---|
| ஃ சுயேட்சை I | — 06 பிரதேச சபைகள் |
| ஃ ஐ. தே. க | — 02 பிரதேச சபைகள் |
| ஃ சுயேட்சை II | — 01 பிரதேச சபை |
| ஃ முஸ்லிம் காங்கிரஸ் | — 01 பிரதேச சபை |

மட்டக்களப்பு மாநகர சபையில் சுயேட்சை II குழு வெற்றிபெற்றது.

### வவுனியா மாவட்டம்:

இம் மாவட்டத்தில் வவுனியா நகர சபைக்கு மட்டும் தேர்தல் நடைபெற்றது; இதில் ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி வெற்றிபெற்றது.

## வாக்குச்சீட்டு மோசடி 16 பேர் பொலிசாரால் கைது

(கொழும்பு)

அம்பாறை நகரசபை உள்ளூராட்சி தேர்தலின் வாக்குச்சீட்டில் மோசடி மேற்கொண்ட பதினாறு பேரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இவர்கள் கள்ள வாக்குப் போட எத்தனிக்கும் போது கைது செய்ததாகவும், பத்துப் பேர் ஆண்களும், ஆறு பேர் பெண்களும் அடங்குவார்கள்.

## தேர்தல் முடியும்வரை புலிகளை நினைத்து அச்சம்

(கொழும்பு)

கிழக்கு மாகாணம், வவுனியா நகரசபை உள்ளூராட்சி தேர்தல் நேற்று முன்தினம் நடைபெற்றுக் கொண்டு இருந்தபோது நண்பகல் வரை புலிகள் குறித்த அச்சமும், வெடிகுண்டு சம்பவங்களும் நடைபெற்றதாக ''திவயின'' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

எனவே குண்டு வெடிப்பு, ஆயுத அச்சுறுத்தல் மத்தியிலே மேற்படி தேர்தலுக்கு முகம் கொடுத்து தேர்தலை நடத்திக்கொள்ள முடியும்என சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி தெரிவித்துள்ளார்.

## அமைச்சின் அனுமதி; காங்கேசனில் பறிப்பு

(யாழ்ப்பாணம்)

சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சு அனுமதியுடன் கப்பலில் பயணிகள் தம்முடன் எடுத்து வந்த பொருள்களை காங்கேசன்துறைதுறைமுகத்திலுள்ள படையினர் பறித்தெடுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

நேற்று முன்தினம் நரோமா கப்பலில் வந்த சில பயணிகள் பாதுகாப்பு அமைச்சின் அனுமதியுடன் பற்றரி, கற்பூரம் ஆகிய பொருள்களை எடுத்து வந்தபோது காங்கேசன் துறையில் அவற்றை சோதனையிட்ட படையினர் பயணிகளிடமிருந்து அப்பொருள்களை பறித்தெடுத்தனர்.

காலை ஆறுமணியளவில் கப்பலில் பயணிகள் காங்கேசன்துறை வந்தடைந்தனர். படையினரின் தீவிர சோதனையின் பின் நண்பகலின் பின்னரே அங்கிருந்து அவர்கள் பருத்தித்துறை வந்து சேர்ந்தனர். (பா)

## வரி விளம்பரம்


**''அகிலன்ஸ்''**

சகல விதமான வாகனங்களின் இலக்கத் தகடுகளும் அழகிய முறையில் எழுதிக் கொடுப்பவர் (மஞ்சள்+கறுப்பு) எழுத்தோவியர் ''அகிலன்ஸ்'' 426. கண்டி வீதி, அரியாலை. (7651)

**சைனீஸ்-உணவு வகை-சூப்வகை**

திருமண வைபவம், பிறந்த நாள், பிரியாவிடை, பாடசாலை வைபவங்கள்- ஏனைய விழாக்கள் - உடன் நாடவும் காருண்யா சைனீஸ் ஹோட்டல் இல 166, 1-ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம் (வேம்படி பாடசாலை முன்பாக) (7647)

**தேவை**

(காசாளர்) கெசியர் -கணக்காளர், பரிமாறுபவர், சமையல் உதவியாள் தொடர்பு காருண்யா சைனீஸ் 166 1-ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். (7648)

**''எல்'' பட்டம் விற்பனைக்கு**

1½ அங். ''எல்'' பட்டம் விற்பனைக்குண்டு தொடர்பு மிக்கேவர். (இ-8746)

**தவறிவிட்டது**

26-02-94 அன்று பாஷையூர் - கொழும்புத்துறைக்கிடையில் கைச்சங்கிலி ஒன்று தவறிவிட்டது: கண்டெடுத்தவர்கள் தயவு செய்து ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கவும் சன்மானம் வழங்கப்படும். (7655)

**வியாபாரிகட்கு**

அழகுசாதனப் பொருள்கள், லேஸ், நூல், கோல்ட் கவறிங் நகைகள் எவர்சில்வர் பாடசாலை உபகரணங்கள் ஆகியவற்றை மொத்தமாகப் பெற்றுக்கொள்ள ஜெயா அழகுசாதனமாளிகை 177A மின்சார வீதி, யாழ்ப்பாணம் (இ-8709)

**தனிச்சிங்களத்தில் பெறுபேறுகள்**

கொழும்பிலுள்ள சுகாதார இலாகாவின் தலைமைப் பீடம் மருந்துக் கலவையாளர்களின் தரம் மூன்று வினைத்திறமை காண் தடைப் பரீட்சையின் பெறுபேறுகளை தனிச் சிங்கள மொழியில்


# வடக்கில் பிரச்சினை உண்டு ஆனால் அது யுத்தமல்ல

## ஜனாதிபதி டி.பி. விஜேதுங்கா

(கொழும்பு)

தென்மாகாணத்தில் நடைபெறும் அரசியல் விளையாட்டை வடக்கில் உள்ளவர்கள் நன்றாக அவதானித்துக் கொண்டிருக்கின்றனர். மலை நாட்டில் உள்ளோரும் அவதானிக்கின்றனர். எனவே கூடுமான வரை கஷ்டப்பட்டு பொதுமக்களை எம்பக்கம் திருப்ப முயல வேண்டும் என ஜனாதிபதி விஜேதுங்கா தெரிவித்துள்ளார்.

மாத்தறையில் தேர்தல் பிரசாரக் கூட்டம் ஒன்றில் பேசிய அவர், இன்று வடக்கில் பிரச்சினைகள் உள்ளதென்பது உண்மை. இது ஒரு யுத்தமல்ல. பிரச்சினை மாத்திரமே. ஈழக் கோரிக்கை நிறைவேறப் போவதில்லை. ஈழத்தை நாம் கொடுக்கமாட்டோம். நாம் இரண்டாக பிரிந்தால் நாடும் இரண்டாகும். ஒரு பகுதியினர் நாட்டை இரண்டாக பிரிக்க பார்த்துக் கொண்டிருக்கின்றனர். இன்னும் ஒரு இனத்தவர் நாட்டை பிடுங்கிவிட எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றனர். இவர்களின் இந்த எதிர்பார்ப்புகள் நிறைவேறாது என ஜனாதிபதி விஜேதுங்கா மேலும் தெரிவித்தார்.

### யாழ். மறை மாவட்ட கத்தோலிக்க திருச்சபையின்

## மேய்ப்புப்பணி மகாநாடு

**6. மகாநாட்டை ஒட்டி சுற்று மடல்கள் வெளியிடப்பட்டனவா?**

இரண்டு சுற்று மடல்கள் வெளியிடப்பட்டன. ஒன்று இலங்கைக் கத்தோலிக்க ஆயர்களின் திருமடலாகவும் மற்றது யாழ் ஆயர் அவர்கள் விடுக்கும் சுற்று மடலாகவும் கத்தோலிக்க இறை மக்களுக்கு வெளியிடப்பட்டன. இவை பங்குத்தந்தையர்கள் மூலமாக ஞாயிறு தினங்களில் கத்தோலிக்க மக்களுக்கு வாசித்து விளக்கப்பட்டன.

**7. இலங்கை ஆயர்கள் விடுவிக்கும் திருமடலின் சில முக்கிய பகுதிகளைத் தரமுடியுமா?**

''கடந்த 25 ஆண்டுகளில் அனைத்துலக கிறிஸ்தவ குடும்பமும், பொதுவாக உலகம் முழுவதும் தொடர்ச்சியாக பல ஆழ்ந்த அறைகூவுகின்ற மாற்றங்களுக்கு உட்பட்டிருக்கின்றன. உலகளாவிய இந்த மாற்றங்கள் எமது மதப்பற்றுக்கு பல சவால்களைக் கொண்டு வருகின்றன'' என்று அறைகூவும் சமூக மாற்றங்கள் பற்றி திருமடல் தெரிவிக்கிறது. தொடர்ந்து ''இவை வடக்கு தெற்கு பிரிவினை, இறிய, தேசிய, இனக் குழுக்களின் தன் முனைப்பு, யுத்தங்களும், போராட்டங்களும், ஒழுக்க சீர்குலைவு, மட்டு மீறிய தன்னலப் பற்று, அகதிகள், புதிய நோய்கள் என்பனவாகும். வரலாற்றில் கிறிஸ்துவின் தொடர்ந்த பிரசன்னமாகிய திருச்சபை என்ற முறையில் எம்மிடம் இவற்றுக்கு தகுந்த விடைகள் கேட்கப்படுகிறது.''

**8. இந்த மகாநாட்டில் இவற்றிற்கெல்லாம் விடைகாணப்படும் என நம்புகிறீர்களா?**

அப்படியல்ல. திருத்தந்தையவர்கள் ''மீட்பரின்பணி'' என்ற சுற்று மடலில் எமது உள்ளரங்க புதுப்பித்தலைத்தான் கருத்தில் கொண்டு அறைகூவல் விடுத்துள்ளார். இந்த மகாநாடு மேற்சொன்ன பிரச்சினைகளுக்கெல்லாம் தீர்வு காண முடியாது. இலங்கை ஆயர்களின் திருமடல் இந்தக் கேள்விக்கும் நல்ல பதில் தருகிறது'' ஒரு தேசிய திருச்சபை என்ற மட்டில் நாம் இதுவரை எய்தப் பெற்றவற்றை மதிப்பீடு செய்யவும் இன்றைய சவால்களையும் நற்செய்திப் பணிக்கான வாய்ப்புக்களையும் கணிப்பீடு செய்வதற்கும்

## விளையாட்டுப் போட்டி

யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியின் வருடாந்த மெய்வல்லுநர் போட்டிகள் நாளை பிற்பகல் இரண்டு மணியளவில் கல்லூரியின் மைதானத்தில் இடம்பெறும். கல்லூரி அதிபர் திருமதி ச. ஜெயராசா தலைமையில் நடைபெறும். இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் சி. புலேந்திரனும், சிறப்பு விருந்தினர்களாக உடற்கல்விக்கான உதவிக் கல்விப் பணிப்பாளர் த. அருணகிரிராசா மற்றும் செல்வி மரு வாசுகி ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர்

# நயினாதீவு ஆலய திருட்டு பக்தர்கள் மத்தியில் விசனம்

(யாழ்ப்பாணம்)

நயினாதீவு சிறீ நாகபூசணி அம்பாள் ஆலயத்தில் விக்கிரகங்களில் அணியப்பட்டிருந்த 38 பவுண் நிறையுடைய தங்க நகைகள் காணாமற் போயிருப்பது தொடர்பாக பக்தர்கள் விசனமடைந்துள்ளனர். ஆலயத்தில் 17-12-93 அன்று உற்சவத்திற்காக விக்கிரகங்களுக்கு அணியப்பட்ட நகைகள் வழமைபோல அகற்றப்படவில்லை என்பதும் அன்றிரவு அது திருடப்பட்டது என்பதும் தெரிந்ததே.

கடற்படையினரின் பூரண கட்டுப்பாட்டில் இருக்கும் இச் சிறுதீவில் இடம்பெற்ற மேற்படி திருட்டு மர்மம் நிறைந்த ஒன்றாக இருப்பதாகவும் கூறப்படுகிறது

இத் திருட்டை கண்டு பிடிக்க இந்து சமய இராஜாங்க அமைச்சர் நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் மேலும் கோரிக்கை விடப்பட்டுள்ளது.

# மேய்ப்புப் பணி மாநாடு ஏற்பாடுகள் தீவிரமாயின

(குருநகர்)

யாழ். மறைவட்ட மேய்ப்புப்பணி மாநாடு இம்மாதம் 8-ம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 3.30 மணிக்கு யாழ். ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை தலைமையில் யாழ். பேராலயத்தில் நடைபெறும் திருப்பலியுடன் ஆரம்பமாக இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

முன்னாள் யாழ். ஆயர் கலாநிதி வ. தியோகுப்பிள்ளை, மன்னார் ஆயர் அதி வண. இராயப்பு யோசேப்பு மற்றும் 80க்குமேற்பட்ட குருக்கள், துறவியர், பொதுநிலையினர் மாநாட்டில் கலந்து கொள்வர்.

இம்மாதம் 9 ஆம், 10 ஆம், 11 ஆம், 12 ஆம், 14 ஆம் திகதிகளில் யாழ். புனித பத்திரிசியார் கல்லூரி மத்திய மண்டபத்தில் மாநாடு தொடர்ந்து நடைபெற இருக்கிறது.

இரண்டாம் வத்திக்கான் சங்கம் (1965) போன்று யாழ். மறைவட்ட மேய்ப்புப் பணிமாநாடும் ஒரு புதுப்பித்தலை மையமாகக் கொண்டு அமையும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

மாநாட்டின் முக்கியத்துவம் பற்றி மாநாட்டின் செய்திப் பரிவர்த்தனைப் பொறுப்பாளர் வண. ஹில்லறி எஸ். ஜெபநேசன் அடிகள் கீழ்க்கண்டவாறு கூறினார்.

''தல திருச்சபையைச் சேர்ந்த குருக்கள், துறவியர், பொதுநிலையினர் தத்தம் கடமைகளையும், பொறுப்புக்களையும் நன்குணர்ந்து தமது பங்களிப்பை திருச்சபையின் நலனுக்காக வழங்குவதற்கு வழிவகுக்கும் ஒரு உன்னத வேலைத் திட்டத்திற்கான முன்னோடி நடவடிக்கையாக அமைகிறது இம் மாநாடு'' (21)

# கல்விவளர்ச்சிக் கழக 2ஆம் ஆண்டு நிறைவுவிழா

(தொல்புரம்)

தமிழீழ விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பினால் நடாத்தப்படும் சுன்னாகம் மதி கல்வி வளர்ச்சிக் கழகத்தின் இரண்டாம் ஆண்டு நிறைவு விழாவும், பரிசு நாளும் வெகு சிறப்பாக நடைபெற்றது.

கடந்த சனிக்கிழமை மாலை 4.30 மணியளவில் சுன்னாகம் மயிலணி சைவ மகா வித்தியாலய மண்டபத்தில் கழக ஆசிரியர் கு. நிமலகுமாரன் தலைமையில் நடைபெற்ற இவ் விழாவினை சைவ மகா வித்தியாலய அதிபர் து. துரைசிங்கம் யாழ். மாவட்ட மாணவர் அமைப்பு உதவிப் பொறுப்பாளர் தமிழ்மறவன் ஆகியோர் பிரதம விருந்தினர்களாக கலந்து கொண்டு மங்கள விளக்கினை ஏற்றி ஆரம்பித்து வைத்தனர். உடுவில் வட்டப் பொறுப்பாளர் ஒப்பிலறிவன் அவர்கள் தேசியக் கொடியை ஏற்றிவைத்தார். தலைமையுரையை அடுத்து பிரதம விருந்தினர்களும், சிறப்பு விருந்தினர்கள் பலரும் சிறப்புரை வழங்கினர். தமிழீழ மகளிர் மாணவர் அமைப்பின் பொறுப்பாளர் செல்வி வாசுகி, வலிகாமக் கோட்ட மாணவர் அமைப்பு மகளிர் பொறுப்பாளர் செல்வி எழிற்கொடி, மாணவர் அமைப்பைச் சேர்ந்த செல்வி அருள்நிதி, உடுவில் கல்விக் கோட்ட மாணவர் அமைப்பு மகளிர் பொறுப்பாளர் செல்வி சபரி. விடுதலைப் புலிகள் உறுப்பினர் பார்த்திபன் உட்பட மற்றும் பல உறுப்பினர்கள் கலந்து கொண்டு கழக ஆண்டு இறுதிப் பரீட்சையில் சித்தியெய்திய கழக மாணவ, மாணவியருக்கு பரிசில்களையும் சான்றிதழ்களையும் வழங்கினார்கள். நிகழ்வின் இறுதியில் கழக மாணவர்களின் கலைநிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. (41)

## தும்புத் தொழில் ஊக்குவிக்கப்படும்

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ்ப்பாணக் கிளை தும்புத் தொழிலை ஊக்குவிக்கும் முகமாக 1,50,000 ரூபாவை ஒதுக்க தீர்மானித்துள்ளது. இதற்கான பணம் தற்போது கையில் இருப்பதாகவும் தெரிய வருகிறது. (நி)


## கண்ணீர் அஞ்சலி

தீவுப்பகுதி தெற்கு, வேலணை பிரதேச செயலகத்தின்
புங்குடுதீவு தெற்கு கிராம அலுவலர்
திரு: கு. சந்திரா அவர்களின் அன்பு மகள்

**குஜேந்தினி**

அவர்கள் 02 - 03 - 94 இல் மரணமடைந்ததனையிட்டு அன்னாருக்கு எமது கண்ணீர் அஞ்சலியையும், குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.

தீவுப்பகுதி தெற்கு பிரதேச செயலகம், சுபாஸ் கட்டிடம் யாழ்ப்பாணம், (7656)

நா. சுந்தரராசா செயலாளர் நலன்புரிச் சங்கம்


## நினைவு கூருகின்றோம்..

## 1994. 03. 03

1986ஆம் ஆண்டு இதே தினத்திற் கிளி-சுனகராயன் குளம், கரடிப்போக்குச்சந்தி ஆகிய பகுதிகளிற் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்ட 02 தமிழர்கள்

யாழ்-நயினாதீவுப் பகுதியில் சிறிலங்காக் கடற்படையினராற் சுட்டுக்கொல்லப்பட்ட பெண் உட்பட 07 தமிழர்கள்

1987ஆம் ஆண்டு மட்டு- ஆரையம்பதிப் பகுதியிற்

கொழும்பிலுள்ள சுகாதார திணைக்கள தலைமைப் பீடம் மருந்துக் கலவையாளர்களின் தரம் மூன்று வினைத்திறமை காண் தடைப் பரீட்சையின் பெறுபேறுகளை தனிச் சிங்கள மொழியில் வெளியிட்டுள்ளது. கடந்த வருடம் செப்ரெம்பர் மாதம் கொழும்பில் நடைபெற்ற இப்பரீட்சையில் யாழ் மாவட்டத்தில் நல்லூர் இடம்பெயர்ந்தோர் அரசமருந்துச் சாலையில் மருந்துக் கலவையாளராக கடமையாற்றும் திரு. இ. அருளானந்தன் பூரணசித்தியடைந்துள்ளார். மேலும் மூன்று பேர் இரு பாடங்களில் சித்தியடைந்துள்ளனர்.

## பரிசளிப்பும் மலர் வெளியீடும்

யாழ். உதயதாரகைச் சங்கத்தின் பொன்விழாப் போட்டியின் பரிசளிப்பு வைபவமும், பொன்விழா மலர் வெளியீடும், யாழ் புனித பத்திரிசியார் கல்லூரியில் அண்மையில் நடைபெற்றது.

யாழ் பல்கலைக்கழக உடற்கல்விப் பணிப்பாளர் திரு. சி. தியாகராசா பிரதம விருந்தினராகப் பங்குபற்றினார். பொன்விழாப் போட்டியில் குருநகர் பாடும்மீன் வி.க. முதலாம் இடத்தைப் பெற்றது.

துள்ளார். இந்த மகாநாடு மேற்சொன்ன பிரச்சினைகளுக்கெல்லாம் தீர்வு காண முடியாது. இலங்கை ஆயர்களின் திருமடல் இந்தக் கேள்விக்கும் நல்ல பதில் தருகிறது'' ஒரு தேசிய திருச்சபை என்ற மட்டில் நாம் இதுவரை எய்தப் பெற்றவற்றை மதிப்பீடு செய்யவும் இன்றைய சவால்களையும் நற்செய்திப் பணிக்கான வாய்ப்புக்களையும் கணிப்பீடு செய்வதற்கும் எமது திருச்சபையின் இன்றைய நிலையை மதிப்பிடுவதற்கும் பரிசுத்த ஆவியின் வழி நடத்துதலின் கீழ் இனிவரப்போகும் ஆண்டுகளில் அதன் வாழ்விலும் பணியிலும் ஏற்படுத்தக்கூடிய புதுப்பித்தலுக்கான வழிவகைகளையும் திட்டங்களையும் உய்த்துணர வேண்டிய காலம் வந்து விட்டது எனக்கருதுகிறோம்.''

**9. தேசிய ரீதியில் மகாநாடு நடைபெறும் என்று சொன்னீர்கள் அது எப்போ நடைபெறும்?**

இலங்கை ஆயர்களின் திருமடலில் 1994 ஆவணி மாதம் கண்டி இலங்காநாயகி தேசிய குருமடத்தில் நடைபெறும் என்று தான் சொல்லப்பட்டது. ஆனால் யோசவ் வாஸ் அடிகளின் புனிதர் பட்டத்தை ஒட்டி திருத்தந்தை அவர்கள் 1995 தை மாதம் இலங்கை வர இருப்பதால் அந்த ஒழுங்குகளை மேற்கொள்ள வசதியாக தேசிய மகாநாடு அடுத்த ஆண்டிற்குப் பின் தள்ளப்பட்டுள்ளது.


அன்பளிப்பு:

**லைடன் ரெக்ஸ் ரைஸ்ஸ் சென்ரர்**

**249, மின்சார நிலைய வீதி,**

**யாழ்ப்பாணம்.**

பொதுமக்கள் தொடர்புக் குழு
மேய்ப்புப்பணி மகாநாடு.
(இ-8757)


11 ஆம், 12 ஆம், 14 ஆம் திகதிகளில் யாழ். புனித பத்திரிசியார் கல்லூரி மத்தியூ மண்டபத்தில் மாநாடு தொடர்ந்து நடைபெற இருக்கின்றது.

...பையின் நலனுக்காக வழங்குவதற்கு வழிவகுக்கும் ஒரு உன்னத வேலைத் திட்டத்திற்கான முன்னோடி நடவடிக்கையாக அமைகிறது இம் மாநாடு'' (21)

## பருத்தித்துறை வாந்திபேதி நால்வர் மரணம்

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் நான்கு பேர் கடந்த மாதம் வாந்திபேதி நோய்க்கு உள்ளாகி இறந்துள்ளனர். இப் பிரிவில் மொத்தம் 14 பேர் இந்நோய்க்கு உள்ளாகியுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

இதேசமயம், கடந்தமாதம் மானிப்பாய் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 15 பேருக்கு வாந்திபேதி நோய் ஏற்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

புளோலி, உடுப்பிட்டி பிரிவில் பலர் இந் நோய்க்கு உள்ளாகி உள்ளனர் எனவும் கூறப்பட்டது (தி)

## கல்வி உபகரணங்கள் நியாய விலையில்

(யாழ்ப்பாணம்)

உலக பல்கலைக்கழகத்தின் யாழ். கிளை யாழ். பல்கலைக் சமூக மாணவர்களது நலன் கருதி பல்வேறு சேவைகளை மேற்கொண்டு வருகிறது.

யாழ். பல்கலைக் கழகத்தில் அலுவலகத்தைக்கொண்டு இயங்கிவரும் இக்கிளை நிறுவனம் மாணவர்களுக்குத் தேவையான கல்வி உபகரணங்களை நியாய விலையில் விற்பனைசெய்துவருகின்றது. அத்துடன் மாணவர்களுக்குத் தேவையான ஏனைய பல வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுத்துவருவதாக இக் கிளையின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (க)

## தென்மராட்சியில் வீதி நாடகங்கள்

(தென்மராட்சி)

தென்மராட்சிப் பகுதியில் வட்டாரரீதியாக விடுதலைப் புலிகளின் ஒளிவீச்சும், வீதி நாடகமும் பூநகரி முகாம் தகர்ப்பு குறும்படம் போன்ற நிகழ்வுகளும் இடம்பெற்று வருகின்றன.

பளை, கெற்பலி போன்ற இடங்களில் துரிதமாக இடம் பெற்று வருகின்றன. இதே வேளை எதிர்வரும் மகளிர் தினத்தை முன்னிட்டு மகளிர் படையினர் வீதிநாடகத்தினையும் நடாத்திவருகின்றனர். பெண்கள் மீதான அடக்குமுறையினை உடைத்து எறிவதுடன் எதிரியை பலவீனம் அடையச்செய்ய யுவதிகளும் ஆயுதம் ஏந்த வேண்டும் என்ற கருத்தில் இவ் வீதி நாடகம் அமைந்துள்ளது. (86)

### பால்மா விநியோகம்

(யாழ்ப்பாணம்)

இடம்பெயர்ந்தோருக்கான பெப்ரவரி மாத முதல் இரண்டுவார இலவச நிவாரண உலர் உணவுப்பொருட்களாக அரிசி, சீனி, மாவு, தேயிலை ஆகியவற்றுடன் ஒன்றுக்கு மேற்பட்ட அங்கத்தவர்களை யுடைய குடும்பத்திற்கு கலன்ட் பால்மாப் பைக்கற் என்பன யாழ். செயலக புனர்வாழ்வுப் பகுதியின் விநியோகப் பட்டியலின்படி வழங்கப்படவுள்ளன. (22)


# எழிலகம்

## பெப்ரவரி மாத அதிர்ஷ்டசாலிகள்

| | |
|---|---|
| முதலாம் பரிசு: | திரு. மது, யாழ்ப்பாணம் |
| இரண்டாம் பரிசு | திரு. ஜெ. சிறீதரன், வட்டு தெற்கு, வட்டு |
| மூன்றாம் பரிசு: | திரு. எஸ்.வி.குருபாதம், வர்த்தக வங்கி, யாழ் |

மாதாந்த சீட்டிழுப்பில் கலந்துகொள்ள ரூபா 500/-க்கு மேல் கொள்வனவுசெய்யுங்கள் புடவை வகைகளும் பொருட்களும் மலிவு விலையில் விற்பனையாகின்றன.
ஆண், பெண் இருபாலாரதும், சிறுவர்களதும் தையல் வேலைகள் குறித்த தவணையில் சிறந்த முறையில் செய்துகொடுக்கப்படும்.

**எழிலகம்** மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். (சி-8758)


...ங்கா இராணுவத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்ட 02 தமிழர்கள்

யாழ்-நயினாதீவுப் பகுதியில் சிறிலங்காக் கடற்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட பெண் உட்பட 07 தமிழர்கள்

1987ஆம் ஆண்டு மட்டு- ஆரையம்பதிப் பகுதியிற் தேசவிரோதக்குழுவினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய-

**கௌசிகன்** (கனகசபை பிறேம்குமார்-ஆரையம்பதி மட்டு)

திருமலை - சாம்பல்தீவு இடம்பெயர்ந்தோர் முகாமில் வைத்துச் சிறிலங்கா ராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்ட 14 தமிழர்கள்;

1988ஆம் ஆண்டு யாழ்-உரும்பராய், சரந்தன் பகுதியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட முற்றுகையில் வீரச்சாவெய்திய-

யாழ் மாவட்டத் தளபதி

**லெப். கேணல் இம்ரான்** (சங்கரப்பிள்ளை சதானந்தன் - சிறீகரன் வீதி, கொக்குவில் - யாழ்)

**கப்டன் அனஸ்-ராஜன்** (நடராசாபிறேமானந்தன் கோப்பாய் - தெற்கு யாழ்.)

**லெப். சூரியகுமார்** (இரங்கசாமி துளசிதாஸ் கொண்டக்கட்டை; வல்வெட்டித்துறை - யாழ்)

**லெப். குணசீலன்** (இரத்தினம் முருகதாஸ் -வள்ளித்தோட்டம், தம்பசிட்டி - பருத்தித்துறை)

1989 ஆம் ஆண்டு மணலாறு - நாயாற்றுப் பகுதியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட முற்றுகையின்போது ஏற்பட்ட சமரில் வீரச்சாவெய்திய-

**ஜஸ்ரின்- சேவியர்** (தில்லையம்பலம் பற்குணராசா 2-ம் பண்ணை செட்டிகுளம் - வவுனியா)

**2-ம் லெப். கஸ்ரோ** (கணேசன் சந்திரமோகன் வட்டக்கச்சி கிளிநொச்சி)

**மேஜர் அரி** (காத்தலிங்கம் பிறேமகிறி-வத்திராயன் வடக்கு, தாளையடி - யாழ்)

1991ஆம் ஆண்டு கிளி - ஆனையிறவுப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலில் வீரச்சாவெய்திய-

**மலையான்** (வேதநாயகம் அன்ரனி யேசுதாசன் ஊறணி, காங்கேசன்துறை -யாழ்)

1992ஆம் ஆண்டு மணலாறு - மண்கிண்டிமலைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத் தொடர் காவலரண்கள் மீது மேற்கொள்ளப்பட்ட அதிரடித்தாக்குதலின்போது வீரச்சாவெய்திய-

**மேஜர் சதாத்- வீமன்** (அமிர்தநாதன் அருளப்பு அடம்பன் - மன்னார்)

1993ஆம் ஆண்டு யாழ்-காக்கைதீவு, வசந்தபுரம் பகுதியில் சிறிலங்கா விமானப்படையினர் மேற்கொண்ட குண்டுவீச்சில் பலியான இதே இடத்தைச் சேர்ந்த இளம் பெண்-

**ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.**

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(சி-8753)

# ஆத்மாவை விற்று ஆடம்பரவாழ்வு தமிழர்களின் செயல் கவலைதருகிறது

## - முன்னாள் ஆயர் டி. ஜே. அம்பலவாணர்

(நமது நிருபர்)

சிறிலங்கா அரசானது எம் மீது பல அடக்குமுறைகளையும் ஒடுக்குமுறைகளையும் பிரயோகித்து வருவதால் தமிழர்களாகிய நாம் திரும்பவும் எமது ஆத்மாவைக் கண்டு கொண்டு புதியதொரு வரலாற்றையும் புதிய தசாப்தத்தையும் ஆக்கிக் கொள்ள முயன்றுவரும் இவ்வேளையில் இந்த ஆத்மாவை விற்காது அதற்கென எங்களை நாங்களே அர்ப்பணித்து போராடுவோமேயானால், அதற்கென உழைப்போமேயானால் அதுவே இக் காலகட்டத்தில் இதற்கென நாம்செய்யும் பெரும் பணியாக இருக்கும்.

இவ்வாறு அண்மையில் பேராயர் குலேந்திரன் ஞாபகார்த்த மண்டபத்தில் நடைபெற்ற ''எனக்குக் கொடுக்கப்பட்ட அருளின் நிமித்தமாக'' எனும் ஆங்கில நூல் வெளியீட்டில் கலந்து கொண்டு பதிலுரை நிகழ்த்துகையில் இலங்கை தென்னிந்திய திருச்சபையின் முன்னாள் பேராயர் கலாநிதி டி. ஜே. அம்பலவாணர் தெரிவித்தார்

இவரது சேவைகளைக் கௌரவித்து இவரதுசேவைத்கள் குறித்த கட்டுரைத் தொகுதி அடங்கிய நூல் வெளியீட்டு விழா யாழ் பல்கலைககழகத் துணைவேந்தர் பேராசிரியர் அ. துரைராசா தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பேராயர் கலாநிதி எஸ். ஜெபநேசன், அருட்தந்தை எஸ். ஜே. இம்மனுவேல், பேராசிரியர் கா. சிவத்தம்பி, கம்பவாரிதி இ. ஜெயராஜ், அருட்திரு. எஸ். ஜெயநேசன், விரிவுரையாளர் எஸ். சிவலிங்கராஜா ஆகியோர் சிறப்புரை நிகழ்த்தினர்; வணபிதா அருட்திரு. தியாகராஜா மதிப்புரை நிகழ்த்தினார்.

''எனக்குக் கொடுக்கப்பட்ட அருளின் நிமித்தமாக'' எனும் முன்னாள் பேராயர் கலாநிதி டி. ஜே. அம்பலவாணரின் சேவைகளைக் கௌரவித்து எழுதப்பட்ட நூலினை யாழ் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் அ. துரைராசா வெளியிட்டு வைத்தார். அதனை பேராயர் கலாநிதி எஸ். ஜெபநேசன் பெற்றுக் கொண்டார்.

இதனைத் தொடர்ந்து அங்கு முன்னாள் ஆயர் உரை நிகழ்த்துகையில், கடந்த சில தசாப்தங்களிலே தமிழ் மக்களின் வரலாற்றை எடுத்து நோக்குமிடத்து இவர்கள் தமது ஆத்மாவை விற்றுவிட்டு தனிப்பட்ட முறையில் எங்கு போயும் நன்றாக வாழலாம் எனத் தெரிந்து கொண்டுள்ளார்கள். இவர்கள் வெளிநாடுகளுக்குச் சென்று அங்கே தமது ஆத்மாவை விற்று ஆடம்பர வாழ்க்கையை வாழ்ந்து வருகின்றார்கள். இது இன்று பெரும் வேதனையைத் தரும் ஒரு நிகழ்வாகவேயுள்ளது.

இவர்கள் தமது ஆத்மாவை விற்று தமது மனச்சாட்சியைத் திருப்திப்படுத்திக் கொண்டு அதனை விற்ற பணத்தைக் கொண்டே தமது இத்தகைய வாழ்க்கையை நடாத்தி வருகின்றனர்.

எனவே தமிழர்களாகிய நாம் சிறிய அளவிலாவது எமது ஆத்மாவைக் காத்துக் கொள்ள வேண்டும். மாறாக அதை விற்றுத் தனிப்பட்ட முறையிலே வாழ நினைக்கக் கூடாது. இந்நிலை உருவாகுமேயானால் நிச்சயம் எமது இலட்சியங்கள் நிறைவேறும் என்பதில் ஐயமில்லை.

தற்போது நான் எனது உத்தியோகபூர்வமான பணியிலிருந்து இளைப்பாறியுள்ளபோதிலும் தொடர்ந்து எனது ஆத்மாவை இதற்கென காத்துக் கொள்ள முயற்சிப்பேன் என்பதை உறுதியாக கூறிக் கொள்ள விரும்புகிறேன். எமது கலாசாரம், எமது பண்பாடு, எமது வரலாறு வருங்காலத்தில் ஒரு மகிமையுள்ள வரலாறாக இருக்க வேண்டுமேயானால் நாம் நீர்த்தொட்டியாக அல்லாது நீர் ஊற்றாக இருந்து எம்மிடம் உள்ளவற்றை மற்றவர்களுக்கும் கொடுத்து வாழப் பழகிக் கொள்வோமேயானால் எமது இலட்சியங்களை எளிதில் அடையக் கூடும் என்பது எனது நம்பிக்கை என்றார், (ச)

# ஆண்டு9மாணவர்களிடையே கணித அறிவு வீழ்ச்சி

(யாழ்ப்பாணம்)

ஆண்டு 9 மாணவர்களிடையே கணிதபாட அறிவு வீழ்ச்சியடைந்து வருவதாக கல்வித் திணைக்களம் நடத்திய ஆய்வு ஒன்றிலிருந்து தெரியவந்துளளது.

இதனையடுத்து கணிதத்தில் பின்னடைந்த மாணவரை மீட்டெடுக்கும் நோக்கில் கல்வித் திணைக்களம் ஒருசெயற்திட்டத்தை தயாரித்துள்ளது. இதன்படி படிநிலைப் பத்திரங்களில் உள்ள பிரச்சினைகளை மாணவர் தீர்க்கும் வேளை அவர்கள் எதிர்நோக்கும் தடைகளை தாண்ட 10 முதல் 15 மாணவர்களுக்கு ஓர் ஆசிரியர் என்ற வகையில் உதவும் திட்டம் அமுலுக்குக் கொண்டுவரப்படும்.

கணித ஆசிரியர்களுக்குப் பொருத்தமான கணிதபாட வேலைத்திட்டத்தை தயாரிக்க வழிசெய்தல் மற்றும் எல்லா மாணவர்களும் ஒவ்வொரு அலகிலும் தன்னிறைவை கணித்து திருந்தக் கூடியவாறு படிநிலைப்பத்திரங்களை வழங்கல் ஆகிய செயற்பாடுகளும் இதன் பொருட்டு அமுலுக்குவரும். இச் செயற்பாடுகளினாலும் பின்னடையும் மாணவருக்கு கணித மூலவள நிலையங்

# விறகுவெட்டச் சென்றவர் சைக்கிள் மாயம்

(தென்மராட்சி)

எழுதுமட்டுவாழ்ப் பகுதியில் விறகு வெட்டுவதற்காக காட்டுக்குச் சென்றவரின் சைக்கிள் மாயமாக மறைந்த சம்பவம் ஒன்று கடந்த செவ்வாய் இடம்பெற்றது.

யாழ்ப்பாணம் நல்லூரடியைச் சேர்ந்த இவர் காட்டுக்குள் விறகு வெட்டுவதற்காக தனது சைக்கிளை வீதியில் பாதுகாப்பாக வைத்துப் பூட்டிவிட்டு காட்டுக்குள் சென்று சற்று நேரத்தில் வந்து பார்த்தபோது சைக்கிள் மாயமாக மறைந்து விட்டது தெரிந்தது. (86)

# இன்றைய நிகழ்வுகள்

குருநகர் யாகப்பர் ஆலய புனர்நிர்மாண நிதிக்காகப் பாடும்மீன் விளையாட்டுக் கழகத்தால் நடாத்தப்படும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித்தொடரில் இன்று ஞானமுருகன் வி. க. வை எதிர்த்து றோயல் வி. கவும், கென்றிஸ் வி. க. வை எதிர்த்து விநாயகர் வி. கவும் விளையாடவுள்ளன. இப்போட்டிகள் இன்று பிற்பகல் மூன்று மணிமுதல் பாஷையூர் சென் அன்ரனிஸ் மைதானத்தில் நடைபெறும்.

ஃ ஃ

யாழ். எழுதுமட்டுவாழ் அ. த. க. பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் இன்று பிற்பகல் 2 மணியளவில் பாடசாலை மைதானத்தில் அதிபர் சின்னையா தலைமையில் நடைபெறவுள்ளது. இவ்விழாவில் பிரதம விருந்தினராக சாவகச்சேரி கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் ஜோண் பிள்ளை கலந்துகொள்ளவுள்ளார்.

ஃ ஃ

சங்கானை பிரதேச பொது நூலக வாசகர் வட்டத்தினரின் கூட்டம் பிற்பகல் நான்கு மணியளவில் நூலக மண்டபத்தில் நா. க. தங்கரத்தினம் தலைமையில் நடைபெறவுள்ளது.

ஃ ஃ

யப்பானிய மற்றும் சங்க இலக்கியங்கள் பற்றிய இரு நூல்களின் அறிமுக விழா இன்று பிற்பகல் 3.30 மணியளவில் நல்லை ஞானசம்பந்தர் ஆதீன மண்டபத்தில் நடைபெறவுள்ளது. பேராசிரியர் அ. சண்முகதாஸ் தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாவில் அ. பஞ்சாட்சரம் கலாநிதி க. குணராசா, சி. வேலாயுதம், வித்துவான் க. சொக்கலிங்கம், கலாநிதி நா. சுப்பிரமணியன் ஆகியோர் உரைநிகழ்த்தவுள்ளனர். (21)

ஃ ஃ

யாழ். ஏழாலை தெற்கு அமெரிக்கன் மிசன் தமிழ்க் கலவன் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் இன்று அதிபர் பொ. கணேஸ்வரலிங்கம் தலைமையில் நடைபெறும். முதன்மை விருந்தினராக உடுவில் கோட்டக் கல்வி அலுவலக உதவிக் கல்விப் பணிப்பாளர் என். இளயாதம் கலந்துகொள்வார்.

ஃ ஃ

இடம்பெயர்ந்துள்ள மண்டைதீவு கார்த்திகேய வித்தியாலய மாணவர்களில் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் 56 மாணவர்களுக்கு யாழ் வட்ட லியோ கழகமும் யாழ் பரியோவான் கல்லூரி லியோ கழகமும் இணைந்து 2000 ரூபா பெறுமதியான அப்பியாசக் கொப்பிகளை வழங்கவுள்ளன. இந்நிகழ்வு இன்று பாரதிதாசன் கல்வி நிலையத்தில் இடம்பெறும்.

ஃ ஃ

கொட்டடி நமசிவாய வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைத் தேர்வு இன்று பிற்பகல் இரண்டு மணியளவில் மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக உடற்கல்விக்கான உதவிக் கல்விப் பணிப்பாளர் த. அருணகிரிராஜாவும், சிறப்பு விருந்தினர்களாக நா. க. சண்முகநாதபிள்ளை, வை. செல்வன் ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

# எழுச்சியுடன் மகளிர் தினம் கொண்டாட ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

அனைத்துலக மகளிர் தினத்தை எழுச்சிகரமாக அனுட்டிப்பதற்கு தமிழீழம் தயாராகி வருகிறது.

இம்மாதம் எட்டாம் திகதி சர்வதேச ரீதியாக அனுட்டிக்கப்படவிருக்கும் மகளிர் தினத்தை தமிழீழத்திலும் அனுட்டிப்பதற்கான பூர்வாங்க ஏற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மகளிர் தினத்தை மக்களுக்கு அறிவிக்கும் முகமாகவும் மகளிர் தின அனுட்டானங்களில் மக்களை பங்குபற்றுமாறு அறை கூவல் விடுக்கும் வகையில் குடாநாட்டின் அனைத்துப்பகுதிகளிலும் உள்ள பிரதான வீதிகளில் பல பதாகைகள் கட்டப்பட்டுள்ளன.

இவற்றைவிட குடாநாட்டின் வீதிகளில் மகளிர் தின

## கிணறுகளுக்கு குளோரின் போடப்படுகிறது

கடந்த இரு மாதங்களுக்கு முன்னர் பெய்த பருவ மழையினால் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு வெள்ள நீரினால் நிரம்பி வழிந்த கிணறுகளுக்கும், பொதுக் கிணறுகளுக்கும் குளோரின் மருந்துபோடப்படவுள்ளது

குடிநீர்க் கிணறுகள் அசுத்

# பாடசாலை சீருடைத்துணி தேவை விபரம் கோரல்

(நமது நிருபர்)

யாழ்: மாவட்ட பாடசாலைகளிடம் இருந்து அவற்றிற்குத் தேவையான இலவச சீருடைத் துணிகளின் விபரங்களை கல்வியமைச்சு கோரியுள்ளது.

இதற்கான விண்ணப்பப் படிவங்களின் ஒரு தொகுதி யாழ் கல்வித் திணைக்களத்திற்கு கல்வியமைச்சினால் அனுப்பி வைக்கப்பட்டு நேற்று முன்தினம் கிடைக்கப் பெற்றுள்ளது.

இவ் விண்ணப்பப் படிவங்களை யாழ் கல்வித்திணைக்களம் தனது பதின்நான்கு கோட்டக்கல்வி அலுவலகங்களிற்கும் விநியோகிக்கவுள்ளது.

இதன்படி விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக்கொண்ட கோட்டக்கல்வி அலுவலகங்கள் பாடசாலைகளுக்கு விநியோகிக்கவுள்ளன. மேலும் இவ் விண்ணப்பப்படிவங்களைப் பெற்றுக்கொண்ட பாடசாலைகள் அவற்றைப் பூர்த்தி செய்து நேரடியாக கல்வியமைச்சிற்கு அனுப்பி வைக்க வேண்டும் என தெரிய வருகின்றது.

தற்சமயம் யாழ் கல்வித் திணைக்களத்திற்கு கல்வியமைச்சினால் அனுப்பி வைக்கப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் போதாதுள்ளமையினால் மிகுதி விண்ணப்பப்படிவங்கள் வந்து சேர்ந்ததும் பாடசாலைகளுக்கு விநியோகிக்கப்படவுள்ளதாக யாழ் கல்வித் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன. (பா)

## 3-ம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு: 14 — 06 — 1973

வீரச்சாவு: 06 — 03 — 1991

### வீரவேங்கை ஜீவா
### ஜெயகுமார் நிர்மலகுமார்

(காஞ்சியப்பாவின் பேரன்)

திதி: 03 - 03 - 1994

முன்னம் செய்த தவத்தின் விதையாய்-
முளைத்தும் அரும்பிய மனத்தின் உறவே!
கன்னம் குழிய கண்கள் மலர-
களித்தும ஆடிய வண்ண நிலவே! நிர்மலனே...
இன்னல் அகலவும், இருள் விலகவும், எழுந்தும்-
தன்னைக் கொடுத்த தனியொளி அருளே!
உன்னைப் பிரிந்தும், உணர்வை இழந்தும் - இந்த
மண்ணில் கலங்கும் மனங்களும் நீ அறிவாயே!

06-03-91 அன்று உன்னைப் பிரிந்து இன்று 3 ஆண்டுகள் போனதே அன்றுநீயே எம்இதயத்தில்என்றென்றும் குடியிருப்பாய்,

மயிலியதனை தொண்டமானாறு, வல்வெட்டித்துறை (இ-8735)

மாவீரன் ஜீவா- பெற்றோர், குடும்பத்தினர் நண்பர்கள்

## விறகுவெட்டச் சென்றவர் சைக்கிள் மாயம்

(தென்மராட்சி)

எழுதுமட்டுவாழ்ப் பகுதியில் விறகு வெட்டுவதற்காக காட்டுக்குச் சென்றவரின் சைக்கிள் மாயமாக மறைந்த சம்பவம் ஒன்று கடந்த செவ்வாய் இடம்பெற்றது.

யாழ்ப்பாணம் நல்லூரடியைச் சேர்ந்த இவர் காட்டுக்குள் விறகு வெட்டுவதற்காக தனது சைக்கிளை வீதியில் பாதுகாப்பாக வைத்துப் பூட்டிவிட்டு காட்டுக்குள் சென்று சற்று நேரத்தில் வந்து பார்த்தபோது சைக்கிள் மாயமாக மறைந்துவிட்டது தெரிந்தது. (86)

## 6-ம் ஆண்டு நினைவஞ்சலி



முன்னாள் யாழ் மாவட்டத் தளபதி

### லெப். கேணல் இம்ரான்

(சங்கரப்பிள்ளை சதானந்தன்)

பிறப்பு 20-01-1961 — வீரச்சாவு 03-03-1988

மண்ணும் மக்களும் மாண்புடன் வாழ
எண்ணியே செயல்கள் இயற்றினீர்- ஆண்டுபல
போனாலும் போகாது உம் நினைவு
ஆனதனால் வாழ்கிறீர் எம்முடன் நீர்!

உடலது மறைந்தாலும் உள்ளத்தில்
திடமுடன் பதிந்தது உம் நினைவு
படையது நடத்திய பாங்கு பசுமையாய்
நடக்கிறோம் உமது பாதையில் துணிவுடன்!

தாயார், உற்றார், உறவினர்,
நண்பர்கள்.

சிறிகரன் வீதி,
கொக்குவில்.

(7641)

கணித ஆசிரியர்களுக்குப் பொருத்தமான கணித பாட வேலைத்திட்டத்தை தயாரிக்க வழிசெய்தல் மற்றும் எல்லா மாணவர்களும் ஒவ்வொரு அலகிலும் தனித்திறனை கணித்து திருந்தக் கூடியவாறு படிநிலைப்பத்திரங்களை வழங்கல் ஆகிய செயற்பாடுகளும் இதன் பொருட்டு அமுலுக்குவரும். இச் செயற்பாடுகளினாலும் பின்னடையும் மாணவருக்கு கணித மூலவள நிலையங்களில் விசேட வகுப்புகள் நடத்தப்படும் எனவும் கல்வித் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

### பொது அறிவுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

அண்மையில் பேராசிரியர் லூதர் ஜெயசிங்கம் ஞாபகார்த்தமாக றோட்டரிக்கழகம் நடாத்திய பொதுஅறிவுப் போட்டியில் வேலணைக் கோட்ட மட்டத்தில் புங்குடுதீவு மகாவித்தியாலயம் முதலாமிடத்தைப் பெற்றுள்ளது. இரண்டாம் இடத்தை மண்டைதீவு மகாவித்தியாலயமும், மூன்றாம் இடத்தை வேலணை சேர் வைத்திலிங்கம் துரைச்சாமி மகாவித்தியாலயமும் பெற்றுக்கொண்டன. (22)

### கிணறுகளுக்கு குளோரின் போடப்படுகிறது

கடந்த இரு மாதங்களுக்கு முன்னர் பெய்த பருவ மழையினால் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு வெள்ள நீரினால் நிரம்பி வழிந்த கிணறுகளுக்கும், பொதுக் கிணறுகளுக்கும் குளோரின் மருந்துபோடப்படவுள்ளது

குடிநீர்க்கிணறுகள் அசுத்தம் அடையாமல் சுகாதார நடவடிக்கைகள் மூலம் பேணிப்பாதுகாப்பதற்கு வலிமேற்கு பிரதேச சபையினர் அதிக கவனம் செலுத்தி வருகின்றனர் மேற்படி பிரதேச சபையினர் எடுத்துக் கொண்ட துரித நடவடிக்கையின் பயனாக மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரியின் சிபார்சின் மூலம் குறிப்பிடத்தக்க அளவு குளோரின் மருந்து கிடைக்கப் பெற்றுள்ளதெனவும் கூடிய விரைவில் வலி மேற்கு பிரதேச சபையைச் சார்ந்த சனசமூக நிலையங்களின் ஊடாக குடிநீர்க்கிணறுக்கும், பொதுக் கிணறுகளுக்கும் போடவுள்ள குளோரின் மருந்தை அவ்வப்பகுதி பொதுச்சுகாதாரப் பரிசோதகரின் ஆலோசனையுடன் வழங்கப்படவுள்ளதாகவும் பிரதேச சபையின் செயலாளர் தெரிவித்துள்ளார். (41)

...கப்பட்டுள்ளன.

மகளிர் தினத்தை மக்களுக்கு அறிவிக்கும் முகமாகவும் மகளிர் தின அனுட்டானங்களில் மக்களை பங்குபற்றுமாறு அறை கூவல் விடுக்கும் வகையில் குடாநாட்டின் அனைத்துப்பகுதிகளிலும் உள்ள பிரதான வீதிகளில் பல பதாகைகள் கட்டப்பட்டுள்ளன.

இவற்றைவிட குடாநாட்டின் வீதிகளில் மகளிர் தினத்தை அறிவிக்கும் பதாதைகளைத் தாங்கிய வண்ணம் பல வாகனங்கள் செல்வதை அவதானிக்க முடிகிறது.

மேலும் கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் வவுனியா ஆகிய பகுதிகளிலும் இவ்வாறான மகளிர் தின ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. (க)

### அம்புலன்ஸ் வரவுள்ளது

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ்ப்பாணக் கிளைக்கு மிக விரைவில் ஒரு அம்புலன்ஸ் வண்டியும், சைக்கிள்களுக்கான டெயிலர்கள் 15-ம், மூன்று முச்சக்கர மோட்டார் வண்டிகளும் கொழும்பிலிருந்து எடுத்து வரப்படவிருப்பதாக கொழும்பிலிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. (நி)

கனவைக் குழிய கண்கள் மலர-
களித்தும ஆடிய வண்ண நிலவே! நிர்மலனே...
இன்னல் அகலவும், இருள் விலகவும், எழுந்தும்-
தன்னைக் கொடுத்த தனியொளி அருளே!
உன்னைப் பிரிந்தும், உணர்வை இழந்தும் - இந்த
மண்ணில் கலங்கும் மனங்களும் நீ அறிவாயே!

06-03-91 அன்று உன்னைப் பிரிந்து இன்று 3 ஆண்டுகள் போனதே அன்றுநீயே எம்இதயத்தில்என்றென்றும் குடியிருப்பாய்,

மயிலியதனை, தொண்டமானாறு, வல்வெட்டித்துறை (இ-8735)

மாவீரன் ஜீவா- பெற்றோர், குடும்பத்தினர் நண்பர்கள்

## 31-ம் நாள் நினைவும் அந்தியேட்டி அழைப்பும்



தோற்றம்: 12-11-1918

மறைவு: 01-02-1994

### திரு. கந்தையா இரத்தினம்

சுன்னாகம்

(இளைப்பாறிய புகையிரத சிற்றூழியர் மேற்பார்வையாளர்)

"தந்தை மகற்காற்றும் நன்றி அவையத்து முந்தி யிருப்பச் செயல்"

பெற்றுப் பேணிக்காத்து அன்பாய் தாலாட்டி வளர்த்தவரே, ஒரு கணமும் எங்கள் உள்ளத்தை விட்டு நீங்காத தந்தையே, எங்கள் வாழ்வு வளம் பெற சிறந்த வழிகாட்டியாய் இருந்த களஞ்சியமே, எங்களுக்காக வாழ்ந்தவரே எங்கள் தெய்வமே உங்கள் ஆத்மா சாந்தி பெற இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

3.3 1994 இன்று வியாழக்கிழமை 'ராஜபவனம்' எமது இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளில் உற்றார், உறவினர், பேராளிகளையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

'ராஜபவனம்'
புகையிரத நிலைய வீதி,
சுன்னாகம்.
(சி-8749)

மனைவி, மக்கள்,
மருமக்கள்,
பெறாமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

# மலத்தியோன் எடுத்துவரப்படாவிடில் யாழ்ப்பாணத்தில் மலேரியா பரவும்

## வைத்திய வட்டாரங்கள் கவலை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண சுகாதார அத்தியட்சகர் பிரிவினரால் மலேரியா நுளம்பு பரவுவதைக் கட்டுப்படுத்துவதற்கான மலத்தியோன் மருந்து விரைவில் எடுத்துவரப்படாதபட்சத்தில் யாழ்ப்பாணப் பகுதியெங்கும் மலேரியா காய்ச்சல் பரவுவது தடுக்க முடியாததாகிவிடும் என்று வைத்திய வட்டாரங்கள் கவலை தெரிவித்துள்ளன

கொழும்பிலிருந்து மலத்தியோன் எடுத்துவரப்படுவதில் காட்டப்படும் அசிரத்தையும் அக்கறையின்மையும் இப்பிராந்திய மக்களை நோயாளிகளாக்குவதற்கே வழிவகுக்கும் என்றும் அவ்வட்டாரங்கள் மேலும் கவலைகொண்டுள்ளன.

யாழ்ப்பாண மாநகரசபை எல்லைக்குள் தெளிக்கப்படுவதற்காக சுமார் 40 பெட்டிகள் மலத்தியோன் எடுத்து வரப்பட்டுள்ளபோதும் இது தேவைப்படும் அளவில் மிகவும் சொற்பமானதே எனவும் கூறப்படுகின்றது.

யாழ்ப்பாண மாவட்டத்திற்கு கடந்த ஒரு வருடத்திற்கும்மேலாகமலத்தியோன் எடுத்துவரப்படவில்லை என்பதும், யாழ்ப்பாணப் பகுதியில் நுளம்புத் தொல்லையும் மலேரியா காய்ச்சலும் தீவிரமாகியிருப்பதும் தெரிந்ததே. (நி)

தண்ணீரை நஞ்சாக்கினால்
கண்ணீரே மிச்சமாகும்

# மங்கள முனசிங்க பரிந்துரை பற்றி இன்னும் முடிவு செய்யவில்லை

(கொழும்பு)

இனப்பிரச்சினைக்குச் சமாதானத் தீர்வொன்றைக்காண நியமிக்கப்பட்ட மங்கள முனசிங்க ஆணைக்குழுவின் பரிந்துரை சம்பந்தமாக அரசு இதுவரை எந்தத் தீர்மானமும் எடுக்கவில்லை. சிரேஷ்ட அரச அதிகாரி ஒருவர் இதனைத் தெரிவித்தார்;

அரச பாராளுமன்றக் குழுவோ அல்லது அமைச்சரவையோ பரிந்துரை குறித்து எந்த முடிவும் எடுக்கவில்லை என்று அவர் மேலும் தெரிவித்தார்;

# சிங்கள பௌத்த நாடிது மாநாயக்கதேரோதெரிவிப்பு

(கொழும்பு)

இந்த நாடு சிங்களபௌத்த நாடு எனவே சிங்களவர்களின் விருப்பத்தைக் கணிசமான அளவில் பூர்த்தி செய்யவேண்டும்; இதனையே நாம் விரும்புகிறோம். இவ்வாறு வண. மடிகே பஞ்ஞாசிஹமாநாயக்க தேரோ தெரிவித்துள்ளார்:

எனவேசிங்களவர்கள் இந்த நாட்டைப் பாதுகாக்க வேண்டும். இந்த நாட்டைப் பாதுகாக்க மலைநாட்டுச் சிங்களவர் அரும்பணியாற்றியுள்ளார்கள்; இவர்களின்செயற்பாடே இன்று சிங்களபௌத்தம், இங்கு நிலைத்து நிற்கக் காரணமாக இருக்கின்றது. எதிர்காலத்திலும் சிங்கள பௌத்தத்தை இதே மலைநாட்டுப் பகுதியைச் சேர்ந்த சிங்களஜனாதிபதிகாப்பாற்ற வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்;

## கிழக்கு மாகாணத்தில்

# அரசபதவிவெற்றிடம் நிரப்ப முயற்சி எடுக்கப்படுகிறது

(கொழும்பு)

கிழக்கு மாகாணத்தில் உள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடத்தப்படும் போட்டிப் பரீட்சைகளுக்கு, அந்த மாகாணத்திலிருந்து விண்ணப்பிப்பவர்கள்குறைவு. அதனால் வெட்டுப் புள்ளிகளை குறைக்கும்படி பரீட்சைப் பகுதி ஆணையாளரைப் பணிக்க அரசு தீர்மானித்துள்ளது;

கிழக்கின் சிவில் நிர்வாகத்தை மீள அமைப்பதற்கு ஆலோசனையைப் பெற ஜனாதிபதி டி.பி. விஜேதுங்கா நியமித்த குழு பரிந்துரைத்ததை அடுத்தே இவ்வாறு தீர்மானிக்கப்பட்டது.

அத்துடன் போட்டிப் பரீட்சையில் உரிய தரத்தை எட்டாதவர்களுக்கு மற்றொரு சந்தர்ப்பம் வழங்கும் படியும், புதிதாக நியமனம் பெறுபவர்கள் பத்து வருடங்கள் கிழக்கில் கடமையாற்ற வேண்டும் என்றும், எல்லை மாற்றங்களையும் நிறுத்தும்படி குழு அரசுக்குப் பரிந்துரைத்துள்ளது;

# பொலிஸ் வன்முறைக்கு எதிராக மாணவர்கள் மறியல் போர்

(கொழும்பு)

பேராதனை பல்கலைக்கழக மாணவர் மீது மேற்கொள்ளப்பட்ட பொலிஸ் வன்முறையை எதிர்த்து பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு முன்னிலையில் அமர்ந்து மாணவர் மறியல் செய்தனர்.

தமது கோரிக்கைகளை ஏற்கும் வரை தாம் தொடர்ந்தும் போராட்டத்தை நடத்தப்போவதாகவும்அரசாங்கம் வன்முறைகளை அதிகரிக்கும் அளவுக்கு போராட்டமும் மேலும் விரிவுபடுத்தப்படுமெனவும் மாணவர் அமைப்பு மேலும் கூறியுள்ளது; இதற்காக சர்வதேச ரீதியில் மாணவர்களின் ஒத்துழைப்பு நாடப்பட இருப்பதாகவும் மேலும் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை ஏனைய பல்கலைக்கழக மாணவர்களும் பேராதனை பல்கலைக்கழக மாணவர்களின் கோரிக்கைகளை ஆதரித்துபோராட்டங்களை நடத்தி வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது;

# பேச்சுவார்த்தைக்கு முன் இருதரப்பும் ஆயுதங்களை கீழே வைக்கவேண்டும்

## வணபிதா அர்னஸ்ட் பேதுகோட தெரிவிப்பு

(கொழும்பு)

சண்டையில் ஈடுபடும் இருசாராரும் பேச்சுவார்த்தைக்கு வருவதானால் ஆயுதங்களை கீழே வைக்கவேண்டும். இதுவே உலக வழக்கம். இதனைத்தான் நாம்பின்பற்ற வேண்டும் அந்த சூழ்நிலையே சமாதான பேச்சுக்கு உகந்தது என வணபிதா அர்னஸ்ட் பேதுகோட தெரிவித்துள்ளார்;

சமாதான பேச்சுக்களை ஆரம்பிக்க முன்னர் இருதரப்பினரும் புரிந்துணர்வு அடிப்படையிலேயே பேச்சுக்களை நடத்த வேண்டும்; எனவே யாரிமூலமும் சமாதானம் ஏற்படுவதே இந்த நாட்டிற்கு சிறந்தது எனவும் அவர் தெரிவித்தார்;

# தென்மாகாண தேர்தல் முடிவுகளால் ஜனாதிபதி யட்டிநுவர திரும்ப நேரும்

## - திருமதி சந்திரிகா குமாரணதுங்க

(கொழும்பு)

விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட நிவாரண உதவிகளை நிறுத்திவிட்டு ஜனசவிய திட்டத்தைஅமுல்படுத்தினார்கள். இதனால்வறுமைக்கோட்டின் கீழ் வாழும் மக்கள் இரந்துண்ணும் ஒரு நிலையே ஏற்பட்டது; மக்கள் இன்று எண்ணற்ற பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றனர். அவற்றைத் தீர்ப்பதற்கு வக்கில்லாத ஐ. தே. க. அரசு, பொதுமக்கள் முன்னணியை சுற்றிசுற்றி தாக்கி வருகிறது; ஐ. தே. க. அரசு ஒரு சிறு பிரச்சினையைத் தானும் தீர்க்குமாயின் நான் அரசியலிலிருந்தே ஒதுங்கி விடுகிறேன் என்று மேல்மாகாண முதல்வர் திருமதி சந்திரிகா குமாரணதுங்க தெரிவித்தார்;

தென்மாகாணசபைக்கான தேர்தல் பிரசாரக் கூட்டமொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய அவர் மேலும் பேசுகையில் ஐ தே க அரசு கல்வியைநாசமாக்கியது இன்றையமுறையால்வசதிபடைத்தோரின் குழந்தைகள் மட்டுமே பயன்பெறுவர்; முறையான கல்வி வாய்ப்புகள் சாதாரண மக்களின் குழந்தைகளுக்கு இல்லை; மக்கள் மயமாக்கல் என்ற போர்வையின் கீழ் சுதந்திரக்கட்சி ஆட்சியின் போது உருவாக்கப்பட்ட தொழிற்சாலைகள் செல்வந்தர்களுக்கு வழங்கப்படுகிறது. பலர் வேலை இழக்கின்றனர். கடந்த பதினேழு ஆண்டுகால ஆட்சியில் ஐ. தே. க. அரசினால்ஒருசிறு பிரச்சினை தானும் தீர்க்கப்படவில்லை; அவ்வாறு தீர்க்கப்படுமாயின் நான் அரசியலிலிருந்தேஒதுங்கிக் கொண்டு விடுவேன்;

...டும் என்ற குரல் இன்று வெளிப்படுகின்றது. பசிவால் வாடுவோரும், வேலையின்மையால் பாதிக்கப்பட்டோரும் மட்டுமன்றி, காணாமற் போன புதல்வர்களின் பெற்றோரும் ஐ. தே. க. வைத் தோற்கடிக்க கங்கணம் கட்டி நிற்கின்றனர், இது தென்மாகாண சபைத் தேர்தல் முடிவுகள் மூலம் வெளிப்படும்;

இந்த தேர்தலின் முடிவுகள் ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவை மீண்டும் யட்டிநுவரவிற்கு விரட்டியடிக்கும் எனவும் குறிப்பிட்டார்; இக்கூட்டத்தில் முன்னாள் முதல்வர் அமரசிறிதொடங்கொட, நிசசரிக பத்திரான, டாக்டர் ஜயசிறி மெண்டிஸ் உட்பட பலரும் உரையாற்றினர்.

# தேர்தல் அசம்பாவிதம் பற்றி விரிவாக அறிக்கை தரப்படும்

## - மட்டு. அரச அதிபர்

ஏறாவூர், காத்தான்குடி பகுதியில் தேர்தல் நாளன்று ஏற்பட்ட சம்பவங்கள் தொடர்பாக அறிக்கை ஒன்றை சமர்ப்பிக்க இருப்பதாகவும், இதற்காக நடந்த சம்பவங்கள் பற்றி தாம் விரிவாக ஆராய்ந்துவருவதாகவும் மட்டக்களப்பு அரசாங்க அதிபர் மோனகுருசாமி தெரிவித்துள்ளார்,

அவர் மேலும் தெரிவிக்கையில் மேற்படிசம்பவம்தொடர்பாக இதுவரை சரியான தகவல்கள் பெறமுடியவில்லை என்றும் தகவல்கள் கிடைத்ததும், உடனடியாக தேர்தல் ஆணையாளருக்கு அறிக்கை அனுப்பி வைக்க இருப்பதாகவும் தெரிவித்தார்.

இதேவேளை தேர்தல் ஆணையாளர் சந்திரானந்த டி சில்வா கூறுகையில், தேர்தல் முறைகேடுகள் தொடர்பானதெரிவித்தாட்சி அலுவரின் அறிக்கைகளை தாம் எதிர்பார்த்து இருப்பதாகவும், அது கிடைத்தவுடன் அடுத்த நடவடிக்கை பற்றி முடிவு எடுக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

மேலும் தேர்தலுக்கு முதல் நாளன்று தமிழர்கள் பெரும்பான்மையாக வாழும் பகுதிகளில் உத்தியோகப்பற்றற்ற வகையில் ஊரடங்கு உத்தரவு அமுலில் இருந்தது போன்ற நிலை காணப்பட்டதாகவும், இராணுவம்பொலிசாரின் நடமாட்டம் மிகஅதிகமாகவே இருந்ததாகவும், தனியார் வர்த்தக நிலையங்கள் அரசாங்க மற்றும் அரசசார்பற்ற நிலையங்களின் அலுவலகம் யாவும் வெறிச்சோடிக் கிடக்கக் காணப்பட்டதாகவும் ஏஜென்சி செய்திகள் தெரிவித்தன.

# செப்டிசீமியாவினால் பலி தழுவுவோர் விகிதம்குறைவு

யாழ் போதனா வைத்திய சாலையில் இவ்வருட ஜனவரி ... அனுமதிக்கப்பட்ட போதும் இதில் பத்து குழந்தைகள் ...

# விவேகானந்தர் நினைவு பேச்சுப்போட்டிபரிசுவிபரம்

கொழும்பு இராமகிருஸ்ண மிசன் ஆதரவுடன் திருநெல்வேலி இராமகிருஸ்ணாலயம் ஒழுங்கு செய்து யாழ்: கல்வித் திணைக்களம் நடாத்திய சுவாமி விவேகானந்தர் நூற்றாண்டுப் பேச்சுப் போட்டியில் பின்வரும் மாணவர்கள் மாவட்ட ரீதியில் பரிசில்களைப் பெறுகின்றனர்; இவர்களுக்கான பரிசில்கள் இராமகிருஸ்ணாலயம் நடாத்தவுள்ள சிக்காகோ நூற்றாண்டு மாநாட்டில் வைத்து வழங்கப்படும்;

| | | |
|---|---|---|
| **கீழ்ப்பிரிவு - ஆண்** | | |
| த. கேதாரன் | யா: சுதுமலை சின்மயபாரதி வித்தியாலயம் | 1-ம் இடம் |
| சி. சிவசுப்பிரமணிய சர்மா | யா: கொக்குவில் இந்துக் கல்லூரி | 2-ம் இடம் |
| அ. யோ தனேந்திரன் | யா. இணுவில் மெய்கண்டான் | 3-ம் இடம் |
| **கீழ்ப்பிரிவு - பெண்** | | |
| இ. திருஷா | யா: மகாஜனா கல்லூரி | 1-ம் இடம் |
| ச. சிவகாமி | யா. வட்டு இந்து கல்லூரி | 2-ம் இடம் |
| கு: தர்சிகா | யா. கொக்குவில் இந்துக் கல்லூரி | 3-ம் இடம் |
| **மத்தியபிரிவு - ஆண்** | | |
| சு: கங்காதரன் | யா; எழுதுமட்டுவாழ், அ. த. க. பாடசாலை, சாவகச்சேரி | 1-ம் இடம் |
| செ: சனந்தன் | யா. அருணோதயா கல்லூரி தெல்லிப்பழை | 2-ம் இடம் |
| தெ. ஞானக்குமரன் | யா: புத்தூர் சோமாஸ்கந்தா கல்லூரி | 3-ம் இடம் |
| **மத்தியபிரிவு - பெண்** | | |
| ந: சங்கீதா | யா. வேம்படி மகளிர் கல்லூரி | 1-ம் இடம் |
| சு: சிவகங்கை | யா. புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்தா கல்லூரி | 2-ம் இடம் |
| அ. கவிதா | யா. கரணவாய் பொன்னம்பல வித்தியாசாலை கரவெட்டி | 3-ம் இடம் |
| **மேற்பிரிவு - ஆண்** | | |
| கே: எஸ். ஸ்ரீதரன் | யா; மத்திய கல்லூரி | 1-ம் இடம் |
| வி. விக்னேஸ்வரன் | யா. உரும்பராய் இந்துக் கல்லூரி | 2-ம் இடம் |
| த: குமரதாஸ் | யா. கொக்குவில் இந்துக் கல்லூரி | 3-ம் இடம் |
| **மேற்பிரிவு - பெண்** | | |
| வ: வனிதா | யா. மானிப்பாய் மகளிர் கல்லூரி | 1-ம் இடம் |
| வி. பிரபாலினி | யா: கொக்குவில் இந்து கல்லூரி | 2-ம் இடம் |
| இ: கோசலை | யா. மெதடிஸ்த பெண்கள்கல்லூரி பருத்தித்துறை | 3-ம் இடம் |

# எதற்கும் தயாராகும் மனநிலை சாரணியம் வளர்க்கின்றது

(யாழ்ப்பாணம்)

சாரணியம்ஒரு புனிதமான சேவை இயக்கமாகும்; இது கல்வி மற்றும் சகல விடயங்களையும் ஊக்குவிக்கிறது என்பதுடன் மாணவர்க... கையில்; யாழ் மாவட்டத்தில் சாரணர்கள் செய்யும் சேவை மிகவும் உன்னதமானது: பல் வேறுபட்ட இன்னல்களுக்கும் மத்தியில் சேவையாற்றும் யாழ்மாவட்ட சாரணர்களின் ...

## போட்டி பரீட்சையில் தெரிவு

(கொழும்பு)

பாடசாலைகளுக்கு அதிபர்கள் நியமிக்கப்படுவது தொடர்பாக இனிமேல் போட்டிப் பரீட்சைகள் நடத்துவது என்று கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

இதற்கமைவாக இந்தப் பதவி உயர்வுகளுக்கான பரீட்சைகள் முதலாம், இரண்டாம் மூன்றாம் தர அதிபர் பதவிகளுக்கு தனித்தனியாக நடத்தப்படவுள்ளது.

தேசிய கல்விச் சேவைகள் அமைப்பின் செயலாளர் பிரேமதாசா சமரதுங்க கல்விச் சேவைகள் சபையுடன் நடாத்திய பேச்சுக்களைத் தொடர்ந்து இதற்கான முடிவு எடுக்கப்பட்டதாக தெரியவருகின்றது.

1990-ம் ஆண்டின் பின்பு இன்றுவரை இத்தகைய பதவி உயர்வுகளுக்கு எந்தவொரு பரீட்சையும் நடாத்தப்படவில்லை என்பது தெரிந்ததே.

(நி)

## யாழ். விஜயம் செய்வோர் கொழும்பில் கூடிப்பேசுவர்

(கொழும்பு)

யாழ்ப்பாணத்துக்கு நல்லெண்ண விஜயத்தை மேற்கொண்ட மதத் தலைவர்கள் அரசையும், புலிகளையும் பேச்சுவார்த்தைக்குக் கொண்டு வருவது பற்றி ஆராயக் கொழும்பில் கூட உள்ளனர். இரு தரப்பினர்களுக்கும் சில முக்கிய ஆலோசனைகளை வழங்க உள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பு ஆயர் அதி.வண நிக்கலஸ் மார்க்கஸ் பெர்னாண்டோ, அங்கிலிக்கன் ஆயர் அதி.வண. கெனத் பெர்னாண்டோ மற்றும் சர்வோதயத் தலைவர் ஏ.ரி. ஆரியரெட்ணா ஆகியோரே கூடிப் பேசவுள்ளனர்.

## ஓய்வு பெறும் வயதெல்லை டாக்டர்களுக்கு நீடிப்பு

(கொழும்பு)

டாக்டர்கள் ஓய்வு பெறும் வயதை 60இல் இருந்து 62ஆக உயர்த்தும்படி சுகாதார அமைச்சு அரசைக் கேட்டுள்ளது. வைத்திய நிபுணர்கள் பற்றாக்குறை காரணமாகவே அமைச்சு இவ்வாறு கோரியுள்ளது.

60 வயதை எட்டவுள்ள டாக்டர்கள் பலர் அண்மையில் ஓய்வு பெறவுள்ளார்கள். வெளி மாவட்டங்களில் 500 டாக்டர்களுக்குப் பற்றாக்குறை உள்ளது. டாக்டர்கள் ஓய்வு பெறும் பட்சத்தில் பற்றாக்குறை மேலும் மோசமடையும் என்று சுகாதார அமைச்சின் பேச்சாளர் தெரிவித்தார்.

டாக்டர்கள் 60இல் ஓய்வு பெற்றால் மேலும் ஐந்து வருடங்கள் ஒப்பந்த அடிப்படையில் வேலை செய்யலாம். ஆனால் டாக்டர்கள் விரும்புகிறார்களில்லை என்று அவர் மேலும் தெரிவித்தார்.

கடந்த வருடம் வைத்திய நிபுணர்களை ரஷ்யாவிலிருந்து பெற அரசு முயற்சித்தது. ஆனால், அவர்கள் அதிகளவு சம்பளம் கேட்டார்கள். அரசுக்கு அது கட்டுபடியாகாததால் அந்தத் திட்டத்தைக் கைவிட்டது.

லிலிருந்தே ஒதுங்கிக் கொண்டு விடுவேன்.

எல்லாமுனைகளிலிருந்தும் ஐ. தே. க. வை விரட்டவேண்

## ஜனவரியில் நேர்முகத்தேர்வு கடிதம் வந்தது மார்ச் 1இல்

கொழும்பில் கடந்த ஜனவரி 18-ம் திகதி நேர்முகப் பரீட்சைக்கு சமுகமளிக்குமாறு கோரும் கடிதமொன்று மார்ச் முதலாம் திகதியன்று தான் சம்பந்தப்பட்டவர்களுக்கு யாழ்ப்பாணத்தில் கிடைத்துள்ளது. மத்திய அரசாங்கத்தின்கீழ் எழுதுவினைஞர் பதவி பெறுவதற்காக விண்ணப்பித்த பெருமளவினருக்கே இந்த நிலை ஏற்பட்டுள்ளது. இந்த நிலைக்கு தபால் தாமதம் தான் காரணமாக இருக்குமா எனப் பாதிக்கப்பட்டவர்கள் கவலை கொண்டுள்ளனர். பண்ணாகம் சுழிபுரத்தைச் சேர்ந்த ஏ.எஸ். நித்தியானந்தன் என்பவரும் இவ்வாறு பாதிக்கப்பட்டோரில் ஒருவர் ஆவார்.

## ராணுவத்தின் குண்டுகளால் தேர்தல் சட்டம் உருவாகிறது

### இந்தியன் எக்ஸ்பிரஸ் வர்ணனை

(டில்லி)

கிழக்கு மாகாண உள்ளூராட்சித் தேர்தல் நகைப்பிற்கிடமானது. இந்திய அமைதிப் படை நடத்திய தேர்தல் போன்றே இத்தேர்தலும் அமைந்துள்ளது என இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகை குறிப்பிட்டுள்ளது. இதன் செய்தியாளர் ரீட்டா செபஸ்தியன் எழுதிய செய்திக் கட்டுரை ஒன்றில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

இராணுவத்தினரின் கைக்குண்டுகளால் தேர்தல் சட்டங்கள் உருவாகின்றன எனவும் இந்தியன் எக்ஸ்பிரஸ் இத்தேர்தல் குறித்து கருத்து வெளியிட்டுள்ளது.

## வாக்களிக்காவிடின் ஆபத்து அச்சத்திலே வாக்களித்தேன்

### -மட்டக்களப்பு வாசி தெரிவிப்பு

(மட்டக்களப்பு)

கிழக்கில் பாதுகாப்பு நிலை சீராக இல்லாதிருக்கும் நிலையில் இத் தேர்தல்கள் எம்மீது திணிக்கப்பட்ட ஒரு தேர்தலாகவே என மட்டக்களப்புவாசி ஒருவர் பி. பி. ஸிக்கு தெரிவித்தார். தேர்தலில் வாக்களிக்காது விட்டால் ஏற்படக்கூடிய ஆபத்தினால் அச்சம் காரணமாக வாக்களிப்பில் நாம் பங்கு பற்றினோம் எனவும் அவர் மேலும் கூறினார்.

உள்ளூராட்சித் தேர்தல்கள் மூலம் அரசு எந்தவிதமான அதிகாரத்தையும் வழங்கப் போவதில்லை. வெளி உலகில் நிலைமை சீராக உள்ளது என்பதைக் காட்ட அரசு இராணுவ உதவியுடன் இத்தேர்தலை நடாத்தியதாகவும் அவர் பி. பி. ஸிக்கு மேலும் தெரிவித்தார்.

யாழ் போதனா வைத்தியசாலையில் இவ்வருட ஜனவரி மாதம் செப்டிசீமியாவினால் இருபத்தி எட்டு குழந்தைகள் அனுமதிக்கப்பட்ட போதும் இதில் பத்து குழந்தைகள் மட்டுமே இறந்துள்ளதாக யாழ் போதனா வைத்தியசாலை குழந்தைகள் பகுதி வெளியிட்டுள்ள புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை சென்ற வருடம் செப்டிசீமியாவினால் நூற்றிஅறுபத்திநான்கு குழந்தைகள் இப் பகுதியில் அனுமதிக்கப்பட்டதாகவும், இதில் 104 குழந்தைகள் இறந்ததாகவும் அப்புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன. இம்முறை ஒப்பீட்டளவில் குழந்தைகள் மேற்படி நோயினால் இறப்பு வீதம் குறைந்துள்ளதாகவும், இதற்கான காரணம் பெற்றோர் குழந்தைகளுக்கு நோய் ஏற்பட்டதும் உடனடியான தகுந்த மருந்து சிகிச்சைக்கு உட்படுத்தியதாகவும் மருத்துவ வட்டாரம் தெரிவிக்கின்றது.

இந்த நோயின் காரணமாக மருத்துவமனையில் அனுமதிக்கப்படும் குழந்தைகள் எழுபத்திஇரண்டு மணித்தியாலங்களின் பின்னர் மரணம் அடைவது குறைவாகக் காணப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

பிறந்த குழந்தைகளுக்கு இதன் தாக்கம் அதிகமாக இருப்பதை அவதானிக்கக் கூடியதாக இருப்பதாகவும், குழந்தைகளின் வயது அதிகரித்துச் செல்லச் செல்ல அதன் தாக்கவீதம் குறைவடைந்து வருவதாகவும் இதனால் இவர்களின் மரணம் குறைவடைவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

சென்ற ஆண்டு செப்டிசீமியாவினால் அனுமதிக்கப்பட்டவர்களில் 63.42 மரணம் அடைந்ததாகவும் ஆனால் இவ்வருடம் ஜனவரி மாதம் 35.72 விகிதமாக மேற்படி மரணம் குறைவடைந்ததாகவும் இது மருத்துவர்களும், தாதிமார்களும், ஏனைய ஊழியர்களின் ஒத்துழைப்பும் இதற்குக் காரணமாக அமைந்துள்ளதாகத் தெரிவிக்கின்றது.

(நி)

கல்வி மற்றும் சகல விடயங்களையும் ஊக்குவிக்கிறது என்பதுடன் மாணவர்கள் எதற்கும் தயாராக இருக்கக் கூடிய சிறப்பியல்பையும் ஊட்டுகிறது. இவ்வாறு யாழ்ப்பாண அரசாங்க அதிபர் கா. மாணிக்கவாசகர் தெரிவித்தார்.

யாழ் இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் யாழ் மாவட்ட சாரணர்களால் தொபகர் நினைவு தினம் அண்மையில் கொண்டாடப்பட்டபோது அதில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்ட அவர் தொடர்ந்து உரைநிகழ்த்துகையில் வேறுபட்ட இன்னல்களுக்கும் மத்தியில் சேவையாற்றும் யாழ்மாவட்ட சாரணர்களின் அர்ப்பணிப்பு மிக்க சேவைகள் பாராட்டப்பட வேண்டியவை. சாரணர் செயற்பாடுகளை வழி நடத்தும் அனைவரையும் பாராட்டுகிறேன் எனவும் அவர் தெரிவித்தார்.

சாரணர்கள் மத்தியில் அர்ப்பணிப்பு மிக்க சேவையில் ஈடுபட்டோரில் முதன்மையானவர்களுக்கு அரச அதிபர் தமது சொந்த நிதியிலிருந்து 5000 ரூபாவை பரிசுத்தொகையாக வழங்கியது இங்கு குறிப்பிடத்தக்கது.


## மேலதிக எழுதுவினைஞர் பதவி (ஆண்)

தேவஸ்தான அலுவலகத்தில் எழுதுவினைஞர் பதவிக்குத் தகுதியானவர்களிடம் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**தகைமைகள்:-**

1. க. பொ. த (சா/தரம்) பரீட்சையில் தமிழ், கணிதம், ஆங்கிலம் உட்பட 6 பாடங்களில் சித்தி பெற்றிருக்க வேண்டும்.
2. தமிழ், ஆங்கிலம் ஆகியவற்றில் கடிதத் தொடர்புகள், தட்டச்சு (ஆங்கிலம், தமிழ்), கணக்குகள் பதிதல் முதலான கருமங்கள் ஆற்றிய அனுபவமுடையவர்களாக இருத்தல் வேண்டும்.
3. 40 தொடக்கம் 60 வரை வயதுடையவர்கள் மாத்திரம் விண்ணப்பிக்க முடியும்.
4. அரசாங்க தனியார் சேவையில் இளைப்பாறியவர்களான அனுபவமுடையவர்க்கு முன்னுரிமை வழங்கப்படும்.

மேற்குறிப்பிட்ட தகைமைகள் உள்ளவர்கள் 20 - 03 - 94ந் திகதிக்கு முன் கீழ்க் காணும் முகவரிக்கு விண்ணப்பிக்கும்படி வேண்டப்படுகின்றனர்.

தலைவர்
ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானம்
(7653) தெல்லிப்பழை.

## சிந்தனைக்கு

செய்வேன் எனச் சொல்லி செய்யா உலோபரைப் போல்
பெய்வேன் எனக் காட்டி பேர்முகிலே மைவானில்
ஓடுவாய்; நிற்பாய்; உறுமுவாய்; மின்னுவாய்;
நீடுவாய் பின் பெய்யாய் நீ.

— வேதநாயகம்பிள்ளை


# ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 03-03-1994
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2839 நிர்வாக பீடம் 2023
தபால் பெட்டி எண் 05


# பேசவே விரும்பாதவர்கள் செயற்படுத்த முடியுமா?

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பது பற்றி தற்பொழுது பலதரப்பில் இருந்து பேசப்படுகின்றது. கிறிஸ்தவ அமைப்புக்களின் நல்லெண்ண விஜயங்கள், சில அரச சார்பற்ற நிறுவனங்களின் முயற்சிகள், அந்நிய நாடுகள் சிலவற்றின் நடவடிக்கைகள் என சமாதான முயற்சிகள் விரிந்து செல்பவையாகவும், சில நடவடிக்கைகள் எடுக்கப்படுவதாகவும் கூறப்படுகின்றது.

அத்தோடு, இச்சமாதான முயற்சிகளில் ஈடுபடுபவர்கள் சிறிலங்கா அரச தரப்பினர் சமாதான முயற்சியில் ஆர்வம் காட்டுவதாகவும், அக்கறை கொண்டுள்ளதாகவும் தெரிவிக்கின்றனர். இக் கருத்தினைச் சமாதான நல்லெண்ண முயற்சியில் ஈடுபட்டுள்ள அங்கிலிக்கன் ஆயர் கெனத் பெர்னாண்டோ தொடக்கம் நோர்வே அரசின் பிரதிநிதி ஆர்ன் பிஜோர்ட்ரோப்ட் வரை வெளிப்படையாகத் தெரிவித்துள்ளனர்.

ஆனால், இவர்கள் இவ்வாறு கூறிக் கொண்டபோதிலும் அரசாங்கத் தரப்பினர் இனப்பிரச்சினைக்கு அரசியற் தீர்வு காண்பது பற்றி வெளிப்படையாக பேச்சுக்கள் எவையும் எடுப்பதாக இல்லை. இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வே ஒரே தீர்வு எனப் பேசி வரும் இவர்கள், சமாதானத் தீர்வு பற்றிப் பேசுவதானால், நிபந்தனைகள் பற்றிப் பேசுகிறார்களே ஒழிய பிரச்சினைக்கான தீர்வு பற்றிப் பேசுவதாக இல்லை. அத்தோடு, இடம்பெற்று வரும் சமாதான நல்லெண்ண முயற்சிகளில் ஈடுபடுவோருடன் தமக்குத் தொடர்பு ஏதும் இருப்பதாகவும் காட்டிக் கொள்ளத் தயாராக இல்லை.

அண்மையில் யாழ்ப்பாணம் வந்து சென்ற அங்கிலிக்கன் ஆயர் கெனத் பெர்னாண்டோ இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண டி. பி. விஜேதுங்கா தயாராக இருப்பதாகவும் தனது நல்லெண்ண முயற்சிக்கு அவ

# அரச எதிர்ப்பு, யுத்த எதிர்ப்புக்கு மக்கள் வழிநடத்தப்பட வேண்டும்

**- வாசுதேவ நாணயக்கார**

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையில் இயங்கி வரும் பிரதான எதிரணியாகிய மக்கள் முன்னணியிடம் அரச எதிர்ப்பு வேலைத் திட்டம் எதுவும் இல்லை. அது மட்டுமல்லாமல் திறந்த பொருளாதாரக் கொள்கையைக் கடைப்பிடிப்பதற்கு சுதந்திரக் கட்சியின் தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்க உலக வங்கிக்கு உறுதி அளித்துள்ளார். சந்திரிகா குமாரணதுங்கவும் திறந்த பொருளாதாரக் கொள்கையை ஏற்றுக் கொண்டுள்ளார். ஆனால் அதனை 'சமநிலைப் பொருளாதாரம்' என நாமம் சூட்டி அதனை நடைமுறைப்படுத்தப்போவதாகக்கூறியுள்ளார் 'சமநிலைப்பொருளாதாரம்' தான் ஏற்கனவே டி. பி. விஜேதுங்காவின் அரசினால் படிப்படியாக அமுல்படுத்தப்பட்டு வருகின்றது.

யுத்தத்தையும், அடக்கு முறைகளையும் பொறுத்தவரையில் சிறிமாவும், சந்திரிகாவும் வித்தியாசமான நிலைப்பாட்டைக் கொண்டுள்ளனர். அன்று ஜனாதிபதி பிரேமதாசா கூட்டிய வட்ட மேசை மாநாட்டில் தென்னிலங்கை இளைஞர்களைக் கொன்று குவிப்பதற்கு ஏற்படுத்தப்பட்ட 'ஒப்பரேஷன் கொம்பைன்' என்னும் நடவடிக்கைக்கு சிறிமாவோ ஆதரவளித்தார். கடத்தப்பட்டவர்களின் சார்பாக போராட அவர் முன்வரவில்லை. மாறாக அப்போராட்டத்தை ஆதரித்த தமது கட்சியைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்களையும் கண்டித்தார்.

அன்று நாட்டைவிட்டோடி அந்நிய நாட்டில் வாழ்ந்த திருமதி சந்திரிகா இன்று எலும்புக்கூடுகளைக் கிளறி எடுப்பதில் ஈடுபட்டுள்ளார். அதே நேரத்தில் சுதந்திரக் கட்சிசம்பந்தப்பட்ட கொலைகளுக்கு ஆதரவு வழங்கியது பற்றி மௌனம் சாதித்து வருகிறார்.

அண்மையில் ஒன்றன் பின் ஒன்றாக ஏற்பட்ட படுதோல்விகள் காரணமாக குறிப்பாக பூநகரியில் ஏற்பட்ட தோல்வியினால் கதிகலங்கியிருந்த ஜனாதிபதி விஜேதுங்காவிற்கு திருமதி சிறிமாவோ ஆதரவு கொடுத்தது மல்லாமல் யுத்தத்தை ஆதரித்து நுகேகொடையில் கூட்டத்தையும் நடத்தினார்.

அக்கூட்டத்தில் உரையாற்றிய திருமதி சந்திரிகா தமிழ் பேசும் மக்களின் உரிமைகள் வழங்கப்பட்டு ஆயுதப்படைகள் வடக்கிலிருந்து கௌரவமாக மீளப்பெறப்பட வேண்டும் எனக் கோரியிருந்தார். அதேநேரத்தில் சுதந்திரக் கட்சி உறுப்பினர்களான சூரியப்பெரும, நளின்சில்வா, தினேஷ் குணவர்த்தனா ஆகியோருடன் வெளிப்படையாக ஒத்துழைத்து வருகின்றார்.

ஆக. ஐ தே.கவிற்கு எதிரான போக்குடைய இடதுசாரி மக்கள் இத்தகைய நிலைமைகளால் குழப்பம் அடைந்துள்ளனர்.

அது மட்டுமல்லாமல் ஏகாதிபத்தியத்தின் உலக வங்கியின் கொழுத்த முதலாளிமாரின் ஆதரவாளரான காமினி திசாநாயக்கவை மக்கள் முன்னணியில் இணைத்துக் கொள்ள திருமதி சிறிமாவோ பகீரதப் பிரயத்தனம் செய்தார். காமினி இருபதாம் நூற்றாண்டின் மிகப்பெரும் அரசியல் குத்துக்கரண வீரராவார். மக்கள் முன்னணியினரால் அரவணைக்கப்பட்ட அவர் அரச எதிர்ப்பு இயக்கத்தை முற்று முழுதாக முறியடித்துள்ளார். மக்கள் முன்னணியின் இத்தகைய அணுகுமுறை அரசாங்கத்தை படுதோல்வியிலிருந்து காப்பாற்றியுள்ளது.

எனவே அரச எதிர்ப்பு, ஏகாதிபத்திய எதிர்ப்பு, மற்றும் யுத்த எதிர்ப்பு குணாம்சம் கொண்ட இடதுசாரி மக்களை வழிநடத்தி செல்வதற்கு இடதுசாரிகள் முன்வர வேண்டும் இடதுசாரி இயக்கமானது பின்வரும் வேலைத் திட்டத்தின் அடிப்படையிலேயே கட்டி எழுப்பப்பட வேண்டும்.

(1) உலக வங்கியின் சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளை குறிப்பாக தனியார் மய திட்டத்தை நிராகரித்தல்.

(2) தமிழ்பேசும் மக்களின் சுய நிர்ணய உரிமையை அங்கீகரிப்பதுடன் தமிழ்க் கட்சிகளால் முன்வைக்கப்பட்ட குறைந்த பட்ச கோரிக்கையான நான்கு அம்சத்திட்டத்தை ஏற்றுக் கொள்ளல்.

(3) உழுபவனுக்கே நிலம். நீர் வரி விதிப்பு மற்றும் நிவாரணக் குறைப்புக்களை வாபஸ் பெறுதல்.

(4) சர்வாதிகார அரசியல் அமைப்பை தூக்கி எறிந்து வேலைத்தள சபைகள் என்ற அடிப்படையில் ஜனநாயகத்தை கட்டியெழுப்புதல்.

தென் மாகாண சபையினை மக்கள் விரோத ஐ.தே.க அரசாங்கம் எதேச்சாதிகாரமாகவும் முற்றிலும் நாகரிகமற்ற முறையிலும் கலைத்தது. உலக வங்கியினதும் சர்வதேச நாணய நிதியத்தினதும் கட்டளைகளுக்கு அடிபணிந்து ஐ தே.க அரசாங்கம் ஏழை எளிய மக்களுக்கு அவசியமான நிவாரணங்களை வெட்டிக் குறைத்துள்ளது. அத்தோடு விலை வரிகளையும் வானளாவ உயர்த்தியுள்ளது வசதி படைத்தோருக்கு வரிச் சலுகைகளை வழங்கும் அதே நேரத்தில் இந்த அரசாங்கம் பயங்கர அடக்கு முறையையும் தமிழ்ப் பேசும் மக்களுக்கு எதிரான மிலேச்சத்தனமான யுத்தத்தையும் நடத்திக் கொண்டிருக்கிறது.

1978-ல் இன்றைய சர்வாதிகார அரசியலமைப்பு மக்கள் மீது திணிக்கப்பட்டபோது அதனை கறுப்புக் கொடி காட்டி எதிர்த்தது ந. ச ச. கட்சியே ஆகும். வடக்கில் பயங்கரவாதத்தை உடைத்தெறிவதற்காகவென 1979ல் கொண்டுவரப்பட்ட பயங்கரவாத தடைச் சட்டத்தை எதிர்த்து ந. ச. ச. கட்சியே ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடாத்தியது, 1982-ல் நடத்தப்பட்டதும் தேர்தல் ஆணையாளராலேயே பின்பு கண்டனம் தெரிவிக்கப்பட்டதுமாகிய சர்வசன வாக்கெடுப்பை பகிஷ்கரித்த பின்னர் 1983 ஜூலையில் நாட்டில் வெடித்த மிகப்பெரிய இனக்கலவரத்தின்போது ந. ச ச. கட்சி மீது வீண்பழி சுமத்தி தடை விதிக்கப்பட்டது.

ந. ச ச கட்சி ஒப்பீட்டளவில் சிறிய கட்சியாக இருந்தபோதும் குறிப்பிடத்தக்கதும், உறுதியானதுமான போராட்டங்களைப் பாராளுமன்றத்திற்கு உள்ளேயும் வெளியேயும் நடத்தி வருகிறது என்பதை யாவரும் அறிவர்.

சிறிய கட்சிகள் பதவிக்கு வரமுடியாது என்பதால் அவற்றை ஆதரிப்பதில் அதிகம் பிரயோசனம் இல்லை என்ற தவறான எண்ணம் மக்கள் மனதிலிருந்து நீங்கவேண்டும்.

அனைத்து மக்களினதும் மேம்பாட்டுக்காகவும், சமத்துவத்திற்காகவும், இனவாத பேரினவாதத்திற்கு எதிராகவும் போராடும் சக்திகளையே மக்கள் ஆதரிக்கவேண்டும். முதலாளித்துவ ஆட்சியாளர்கள் நடத்திவரும் கடத்தல் நாடகங்களும், கபட அணுகுமுறைகளும் எம் கண்முன்னாலேயே நாள்தோறும் இடம்பெற்றவண்ணம் இருக்கின்றன இவை எல்லாவற்றையும் மனதிற் கொண்டு மக்கள் தெளிந்த சிந்தனையுடன் சரியான பாதையில் செல்ல வேண்டியதே மிக அவசரமும் அவசியமுமான காரியமாகும்.

குறிப்பாக படுமோசமான அடக்குமுறைகளுக்கும், அழித்தொழிப்புகளுக்கும் ஆளாக்கப்பட்டுவரும் தமிழ்ப் பேசும் மக்கள் இதனைக் கவனத்திற் கொள்வது அவர்களின்விமோசனத்திற்கு இன்றியமையாததாகும்.

# கொர்பச்சேவை கே. ஜி. பி. யே கவிழ்த்தது

முன்னாள் சோவியத் ஜனாதிபதி மிக்கெயில் கொர்பசேவ் 1991இன் ஆகஸ்ட் மாதத்தில் தீவிரவாத படைகளின் கூட்டணியினால் மூன்று தினங்களுக்கு பதவியிலிருந்து

ரல்கள் ஆதரவு காட்டிய போதிலும் கூட சோவியத் சாம்ராஜ்யத்தைப் பேணுவதையே கே. ஜி. பி. தலைமைப்பீடம் கூடுதல் முன்னுரிமையாகக் கருதியது.

விபரங்கள் ரஷ்ய பத்திரிகைகளில் வெளியாகின. மாஸ்கோவில் உள்ள கே. ஜி. பி யின் முதலாவது பிரதான நிர்வாகத்தின் இரகசிய தளத்தில் சதிக்கான கூட்டங்களில் ஒரு சிலரின் பங்குபற்றுதலு

பாலானவற்றை நடைமுறைப் படுத்த சதியாளர்களினால் முடியாமற்போனது. யெல்சினின் எதிர்ப்பு இயக்கத்தில் சேர்ந்துகொள்வதற்கு பழமைவாதிகளிடமிருந்துவரும் நிர்ப்பந்தங்களை தான் எதிர்ப்ப

இதுபோன்ற ஒரு சூழ்நிலை லெனின்கிராட்டில் நடைபெற்றது. அங்கு ஜனநாயகரீதியில் தெரிவான அதிகாரிகளைக் கைது செய்ய கிரையுச்கோவ் விடுத்த உத்தரவை உள்ளூர் கே ஜி பி நிராகரித்தது. மூன்று

இருப்பதாகவும் தனது நல்லெண்ண முயற்சிக்கு அவ ரின் பூரண ஆதரவு இருப்பதாகவும் தெரிவித்திருந்தார். ஆனால், இங்கிருந்து கொழும்பு சென்ற ஆயர் கெனத் பெர்னாண்டோ டி. பி. விஜேதுங்காவைச் சந்தித்தாரோ இல்லையோ தெரிய வரவில்லை. ஆனால், அவர் டி. பி யுடன் தொடர்பு கொண்டிருப்பார் என்பதில் சந்தேகமில்லை. இதேவேளை, யாழ்ப்பாணம் வந்துபோன ஆரியரெட்னா டி. பி. விஜேதுங்காவை சந்தித்துப் பேசியுள்ளார். தனது புலிகளுடனான பேச்சுவார்த்தை பற்றியும் விளக்கியும் உள்ளார்.

ஆயினும், டி. பி. விஜேதுங்கா இந்நல்லெண்ண குழுவினரின் விஜயம் பற்றி எதையுமே வெளிப்படையாகக் கூறவில்லை. நல்லெண்ணக் குழுவினர் புலிகளுடன் பேச்சு நடத்திவிட்டு யாழ்ப்பாணத்தில் இருந்து திரும்பும் போது தாம் நல்லெண்ண சமிக்ஞைகளைக் கொண்டு செல்வதாகக் கூறிச் செல்கின்ற போதும், அரசிடம் இருந்து எதுவும் கிடைப்பதாக இல்லை.

இதேபோன்றே, கத்தோலிக்க கொழும்பு அதிமேற்றிராணியார் நிக்கலஸ் மார்கஸ் பெர்னாண்டோ மற்றும் மெதடிஸ்த திருச்சபை ஆயர்கள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவுடன் இது தொடர்பாக பேச்சுக்களை நடத்தியிருப்பினும், அவரும் எதுவித தகவல்களையும் வெளியிடுவதாக இல்லை. மாறாக, மதரீதியான அமைப்புக்கள் உடனோ அன்றி அரச சார்பற்ற நிறுவனங்களுடனோ பேச்சுவார்த்தை நடத்தி இனப்பிரச்சினை விடயத்தில் எதுவித சமரச உடன்பாட்டிற்கு வரவில்லை எனத் தெரிவித்துள்ளதோடு இரகசியப் பேச்சுக்களில் தமக்கு நம்பிக்கை இல்லை எனவும் தெரிவித்துள்ளார்.

அதாவது, இனப்பிரச்சினைக்கு சமாதானப் பேச்சுக்கள் குறித்து இவர்கள் வெளிப்படையாகப்பேசவே அஞ்சுவதோடு, இரகசியமாகத் தாம் விரும்பியோ விரும்பாமலோ மேற்கொள்ளும் சில நடவடிக்கைகளையும் மறைக்கவே முற்படுகின்றார்கள்- அதாவது, சமாதானம் பற்றியும், தமிழருக்கு அதிகாரங்கள்பகிர்ந்தளிப்பதுபற்றியும்அவர்கள் வெளிப்படையாகப் பேசத் தயாராகஇல்லை. அந்தளவிற்கு அவர்கள் பௌத்த பேரினவாதத்தின் மீது வெறி கொண்டவர்களாகவோ அன்றி பௌத்த பேரினவாதத்திற்கு அச்சம் கொண்டவர்களாகவோ உள்ளனர்.

இந்த நிலையில் இனப்பிரச்சினைக்கு அரசியற் தீர்வொன்றைக் காணவும், அதனைச் செயற்படுத்தவும் அரசியல்வாதிகள் எந்தளவிற்கு முனையக் கூடும்? மறுவளமாக அவர்களால்எந்தளவிற்குமுடியும்.இந்நிலையில், அரசியல் தீர்வொன்றை அரசாங்கத்திடம் இருந்து எவ்வாறு எதிர்பார்க்க முடியும்? அதனால் எந்தளவிற்குப் பயன் கிட்டும்?

---

தினங்களுக்கு பதவியிலிருந்து அகற்றப்பட்டிருந்தபோது நிக்கிடா குருஷேவ்வின் கதியையே பெரும்பாலும் அடைந்தார். ஏனைய அரச நிறுவனங்களுக்கு ஒருபடிமேல் வைத்ததன் மூலம் கே. ஜி. பி புலனாய்வுப் பிரிவு தன்னிச்சையாக செயற்பட அனுமதித்ததில் கொர்பசேவும் தனக்கு முன்பிருந்த ஆட்சியாளர்களைப் போன்றே தவறு செய்துவிட்டார்.

கொர்பசேவிற்கு எதிரான இந்த சதி குறித்து நடத்தப்பட்ட பூர்வாங்க விசாரணைகளின் கண்டுபிடிப்பில் அச்சதி கே. ஜி. பியினால் திட்டமிடப்பட்டது என்பது தெளிவாகத் தெரிந்தது. இச்சதியில் கம்யூனிஸ்ட் கட்சியும் இராணுவமும் சம்பந்தப்பட்டிருந்தாலும் சிதைவுபட்ட சோவியத் யூனியனில் இவ்வாறான ஓர் சதியை மேற்கொள்ள சக்தி வாய்ந்த ஒரே ஒரு மத்திய நிறுவனமாக கே. ஜி. பி மட்டுமே இருந்தது. ஜனநாயகமயமாக்கலுக்கும் சீர்திருத்தத்திற்கும் கே. ஜி. பி ஜெனரல்கள் ஒரு சிலரின் பங்குபற்றுதலுடன் ஆகஸ்ட் ஆரம்பத்தில் சதிக்கு திட்டமிடப்பட்டதை அந்த விபரங்கள் எடுத்துக் காட்டின. 1991 ஆகஸ்ட் இரண்டாவது வரத்தின் போது கிரையுச்கோவ் மாஸ்கோவில் கே ஜி. பி. ஜெனரல்களுடனும் அவசர நிலைக்கான அரசாங்க குழுவின் எதிர்கால உறுப்பினர்கள் சிலருடனும் வழமையானகூட்டங்களை நடத்தினார்.

கட்சி அமைப்பில் உள்ள தீவிரவாதிகளைப் போலன்றி கிரையுச்கோவ் தலைமையிலான கே. ஜி பி சந்தைப் பொருளாதாரத்திற்கும் தனியார் மயமாக்கலுக்கும் மாறுவதை எதிர்க்கவில்லை. எனினும் நாட்டின் அரசியல் பொருளாதார நிகழ்வுகள் கே. ஜி. பியின் கட்டுப்பாட்டில் தொடர்ந்து இருக்க வேண்டும் எனும் நிபந்தனையின் கீழேயே சீர்திருத்தத்துக்கான அவர்களின் ஆதரவு அமைந்திருந்தது. இதன்படி 1991 ஏப்ரலில்குடியரசு தலைவர்களுடன் ஒத்துழைப்பதற்கான கொர்பசேவின் நகர்வு அரசுக்குள் அரசாக இயங்கும் கே. ஜி. பியின் அந்தஸ்துக்கு ஆபத்து ஏற்படுவதாக கே. ஜி. பி தலைமைப்பீடம் உணர்ந்தபோது கிளர்ச்சியில் இறங்கினர்.

இச்சதியின் பொழுதும் அதற்கு சிறிது முன்னரும் கே ஜி. பி எவ்வாறு நடந்து கொண்டது என்பது பற்றிய

கொர்பசேவை தனிமைப் படுத்திய பின்னர் ரஷ்ய ஜனாதிபதி யெல்சின் உட்பட பெருந்தொகையான சீர்திருத்தவாதிகளை கைது செய்யவும் தகவல் தொடர்புகளை துண்டிக்கவும்எதிர்ப்புப் பத்திரிகைகளை தடை செய்யவும் கே.ஜி பி உத்தேசித்திருந்தது. மூன்று நாட்களாக சோவியத் கே ஜி பியின் ஆட்சியின் கீழ் வைக்கப்பட்டிருந்ததாகவே தோன்றியது.

இச்சதியை ஆதரிக்க 70 சதவீதமான பிராந்திய கே. ஜி. பி நிறுவனங்கள் மறுத்ததால் தமது தீர்மானங்களில் பெரும் பந்தங்களை தான் எதிர்ப்பதாக ரஷ்யக் குடியரசு கே. ஜி பி தலைவரான விக்டோர் இவனென்கோ அறிவித்தார். ஆப்கானிஸ்தானிலும் லித்துவேனியாவிலும் இரகசிய நடவடிக்கைகளை மேற்கொண்ட கே. ஜி பியின் பிரதான அதிரடிப்படையான அல்பாகூட ரஷ்ய பாராளுமன்றத்தைக் கைப்பற்றுவதற்கான உத்தரவுகளுக்கு தான் அடிபணியப் போவதில்லை என பலத்தை சமிக்ஞையை விடுத்தது.

இச்சதியின்போது மாஸ்கோ திரும்பிய யெல்சினை கைது செய்ய கே. ஜி பி தலைமைப் பீடம் தவறியமை அவரைப் பாராளுமன்றக் கட்டடத்திற்குள் சென்று சதி எதிர்ப்புக்குத் தலைமைதாங்க வழிவகுத்தது இவ்வாறே கே ஜி பியின் முதலாவது பிரதான நிர்வாகத்தின் விசேட அதிரடிப்படையின் தளபதி யானஷிபார்சின் தனது உத்தரவுகளுக்கு மட்டுமே கட்டுப்படுமாறு படைகளுக்கு உத்தரவிட்டார்.

கே ஜி பி நிராகரித்தது. மூன்று நாள் நீடித்தசதியின் பொழுது தடுத்து வைக்கப்பட்டிருந்த கொர்பச்சேவை விடுவிக்க உக்ரேயினில் உள்ள கே. ஜி. பி எல்லைக் காவல்படையின் சில பிரிவுகள் முயன்றதாகவும் கூறப்பட்டது. இதேவேளை ஏனைய கே. ஜி. பி பிரதிநிதிகள் ரஷ்யப் பாராளுமன்றத்தைப் பாதுகாத்தவர்களுக்கு ஆயுதங்களையும், அச்சக வசதிகளையும் 10 லட்சம் ரூபிள் நாணயங்களையும் வழங்கினர்

சதியைத் தொடர்ந்து மேற்கொள்ள போதிய அதிகாரம் தமக்கு கிடைக்கவில்லை என்பதை உணர்ந்து கொண்ட கிறையுச்கோவும் அவரது ஆட்களும் சதியைக்கைவிட்டனர். இதையடுத்து அவர்கள் கைது செய்யப்பட்டனர். பின் அரசியல் களத்திலிருந்து மறைந்து போயினர் 1917ஆம் ஆண்டு ஒக்டோபர் புரட்சி முதல் அரசியலில் ஆதிக்கம் செலுத்தி வந்த கே. ஜி. பியின் முடிவை இது குறிக்கும்.

— இன்டர்கோ பிரஸ்

---

# பாலத்தீனியர் பாதுகாப்புக்கு சர்வதேச அமைதிப்படை வேண்டும்

## பாலத்தீனிய விடுதலை இயக்கம் கோரிக்கை

(டுனிஸ்)

இஸ்ரேலினால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள அரபுப் பிரதேசங்களில் வாழும் பாலத்தீனியர்களின் பாதுகாப்பிற்காக சர்வதேச அமைதிப்படை நிலை நிறுத்தப்படவேண்டும் எனவும், ஐ. நா. பாதுகாப்புச்சபை இத்தீர்மானத்தை நிறைவேற்ற வேண்டுமென்றும் பாலத்தீனிய விடுதலை இயக்கம் கோரிக்கை விடுத்துள்ளது. பாலத்தீனிய விடுதலை இயக்கம் இது பற்றி மேலும் குறிப்பிடுகையில் அவ்வாறு செய்வதன் மூலமே ஹெப்ரோன் படுகொலை போன்ற சம்பவங்கள் மீண்டும் நிகழாமல் தடுக்க முடியும் எனவும் தெரிவித்தது. இதேவேளை இஸ்ரேல் அரசு கூறுகையில் இப்பகுதியில் வாழும் யூதக் குடியேற்ற வாசிகளின் ஆயுதங்கள் களையப்படும் எனவும், தீவிர யூதவாதிகள் தண்டிக்கப்படுவார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# காஷ்மீர் பற்றி பேசுவதற்கு ஐ. நா. மனித குழு மறுப்பு

பாகிஸ்தானில் செயற்படும் அரச சார்பற்ற நிறுவனங்கள் எதுவும் காஷ்மீரின் நிலைபற்றி தமது அறிக்கைகளில் எதையும் குறிப்பிடக் கூடாது என்று ஐ. நா. மனித உரிமைகள் கமிஷன் கேட்டுக் கொண்டுள்ளது.

இந்தக் கமிஷனின் கூட்டம் அண்மையில் ஜெனீவாவில் நடந்த போது பாகிஸ்தானின் அரச சார்பற்ற நிறுவனம் ஒன்றைச்சேர்ந்தபிரதிநிதி ஒருவர் காஷ்மீரைப் பற்றிகுறிப்பிட்ட உடனேயே இந்தியா அதற்குஆட்சேபம்தெரிவித்தது

# தென்னாபிரிக்க பேச்சில் சிறியளவு முன்னேற்றம்

(யோகானஸ்பர்க்)

தென்னாபிரிக்காவில் ஆபிரிக்க தேசிய காங்கிரசும், சூலு இன்பாதா கட்சியும் நடத்திய பேச்சுக்களில் முன்னேற்றம் காணப்பட்டிருப்பதாக ஏஜென்சி செய்திகள் கூறியுள்ளன.

அடுத்த மாதம் நடைபெறவுள்ள இனவேறுபாடற்ற முதலாவது தேர்தலில் பங்குபற்றுவது தொடர்பாக அரசியல் கட்சியாக தம்மைப் பதிவு செய்து கொள்வதற்கு சூலு இன்பாதா கட்சி இணக்கம் தெரிவித்துள்ளது. இதேவேளை ஆபிரிக்க தேசிய காங்கிரசும் தன் பங்கிற்கு மீதமுள்ள கருத்து வேறுபாடுகளை தீர்ப்பதற்கு சர்வதேச மத்தியஸ்துவத்துடனான பேச்சுகளை நடத்த இணக்கம் தெரிவித்துள்ளது.

# மனோதிடத்தைக் கைவிடாத மக்களைப் பாராட்டுகிறேன்

## வடக்கு, கிழக்கு குறித்து தொண்டமான்

(கொழும்பு)

யாழ்ப்பாணத்தில் போர் சூழ்நிலை நிலவுகின்றது. எனினும் பாடசாலைகள், பல்கலைக்கழகம் என்பன இயங்குகின்றன. மாணவர் கல்வியில் கவனம் செலுத்துகின்றனர். மலையகத்தில் அவ்வாறான ஒரு சூழ்நிலை இல்லை. தேவையான வசதி வாய்ப்புகள் இல்லையென்பதை நான் ஒப்புக்கொள்கிறேன் என அமைச்சர் தொண்டமான் தெரிவித்தார்.

கண்டியில் பாடசாலை பரிசளிப்பு வைபவம் ஒன்றில் கலந்துகொண்டு அவர் பேசினார். பெரும்பான்மை இனம் ஒற்றுமைப்படவேண்டும் என வலியுறுத்தப்பட்டு வரும் இன்றைய நிலையில் சிறுபான்மை இனமும் ஒன்றுபட முன்வர வேண்டும். நம் மத்தியில் சிறுபான்மை இனங்களின் எதிர்கால நலன் கருதி செயற்படாத பலர் இருக்கின்றனர். இவ்வாறான சக்திகளால் தான் பெரும்பான்மை இனக் கட்சிகளும் அரசும் சிறுபான்மை இனங்களைப் பிரித்து சின்னாபின்னப்படுத்த முன்வருகின்றன.

வடக்கு - கிழக்கில் இன்று நடப்பது என்ன? சாவுகளும் துன்ப துயரங்களுமே தொடர்கின்றன. எனினும் மக்கள் தமது மனோதிடத்தைக் கைவிடவில்லை. உறுதியாக நிலைத்து நிற்கின்றனர். அம் மக்களை நான் பாராட்டுகிறேன்.

ஐ. தே. கவிற்கு ஆதரவாக தேர்தல் பிரசாரம் செய்வதற்கு நான் அழைக்கப்பட்டேன். ஆனால் நான் இந்த அழைப்பை ஏற்றுக்கொள்ளவில்லை. வடக்கு - கிழக்கில் தமிழ் மக்களுக்கெதிராக பிரசாரத்தில் ஈடுபடவோ வேறு எவருக்கும் உதவி செய்யவோ நான் விரும்பவில்லை. இதனை நான் ஒரு கொள்கையாகவே எடுத்துச் செயற்படுகிறேன். எனவே நான் வடக்கு-கிழக்கில் தேர்தல் பிரசாரம் செய்ய அழைத்தும் போகவில்லை என அமைச்சர் தனது உரையில் மேலும் தெரிவித்தார்.

## விபத்தில் பெண்மணி காயம்

விபத்தில் சிக்கிக் கொண்ட பெண் ஒருவர் தலையில் காயமடைந்த நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

மோட்டார் சைக்கிளில் வந்துகொண்டிருந்த இப் பெண் பருத்தித்துறை இறங்குதுறையில் லொறி ஒன்றுடன் ஏற்பட்ட விபத்தின் போதே காயமடைந்தார்.

இச்சம்பவம் நேற்று காலை நடைபெற்றது.

திருகோணமலையிலிருந்து இடம் பெயர்ந்து சுப்பர் மடத்தில் தங்கிவரும் திருமதி அ. இந்திரா (வயது 47) என்பவரே விபத்தில் காயமடைந்து சிகிச்சை பெற்று வருகிறார். (யோ)

## தாதிகள் விஞ்ஞானமாணி

# பட்டப்படிப்பு விண்ணப்பம் திறந்தபல்கலை கோருகிறது

(யாழ்ப்பாணம்)

தாதிகள் விஞ்ஞானமாணி இரண்டுவருட பட்டப்படிப்புகளுக்கான விண்ணப்பங்களை திறந்த பல்கலைக்கழகம் கோரியுள்ளது. மருத்துவ கவுன்சிலில் பதிவு செய்து குறைந்தது இரண்டு வருட அனுபவம் உள்ள தாதிகள் அல்லது க. பொ. த. உயர்தரப் பரீட்சையில் 3 சித்திகளைக் கொண்டவர்கள் இதற்கு விண்ணப்பிக்க முடியும்.

பயிற்சிநெறிகள் 1994 மே மாதமளவில் ஆரம்பமாகும். விண்ணப்ப முடிவுத்திகதி இம் மாதம் 18 ஆம் திகதியாகும். விண்ணப்பிப்பவர்கள் இம் மாதம் 20 ஆம் திகதி நுகேகொடவில் உள்ள திறந்த பல்கலைக்கழகத்தில் தெரிவுப் பரீட்சைக்கும், ஆங்கிலத் தகுதிகாண் பரீட்சைக்கும் தோற்றவேண்டும்.

இதுகுறித்த விண்ணப்பவிபரங்களை யாழ். போதனா வைத்தியசாலை பொது வைத்தியதாதிகள் சங்கத்தினரிடம் பெற்றுக்கொள்ளுமாறு சங்கத்தினர் கேட்டுக்கொண்டுள்ளனர்.

## கலை வாரம்

வருடாவருடம் யாழ் பல்கலைக்கழக கலைப்பீட மாணவர்களினால் சிறப்பாகக் கொண்டாடப்படும் ''கலை வாரம்'' நேற்று முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கலை வார நிகழ்வில் கலை கலாசார நிகழ்ச்சிகளும், உள்ளக, வெளியக விளையாட்டும் இடம்பெற்று வருவது குறிப்பிடத்தக்கது. (05)

## நூலகர் பதவி துறப்பு

யாழ். பல்கலைக்கழக ''நூலகர்'' திரு. எஸ். முருகவேள் தனது பதவியில் இருந்து இராஜினாமாச் செய்துள்ளார் என பதிவாளர் திரு. க. பரமேஸ்வரன் தெரிவித்துள்ளார் (05)

# யாழ். மாநகரப்பகுதியில் மலேரியா தடுப்பு முயற்சி

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகரசபை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவினர் இன்று மலத்தியோன் தெளிப்பு நடவடிக்கையை மேற்கொள்ளவுள்ளதாக யாழ். சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் தெய்வேந்திரம் தெரிவித்தார்.

தற்போது வேகமாய் பரவிவரும் மலேரியா நோயைக் கட்டுப்படுத்தும் நோக்குடன் இந் நடவடிக்கையை தாம் மேற்கொள்ளப்போவதாகவும் இதனை மூன்று கட்டங்களில் செயற்படுத்த இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இதன் முதற் கட்டமாக மலேரியாநோய் வேகமாய் பரவிவரும் பகுதியும், மலேரியா நோயாளரின் பத்து வீதத்திற்கு மேல் மூளை மலேரியா நோயாளர் கண்டுபிடிக்கப்பட்டபகுதியும் தெரிந்தெடுக்கப்பட்டிருப்பதாகவும், இதற்கு சுழற்சி முறையில் மலத்தியோன்தெளிக்கப்படும் என்றும் இதன் ஆரம்ப கட்ட...

...என்றும் கூறினார்.

போதியளவு மலத்தியோன் கிடைக்கப் பெற்றால் முழுமையாக மலத்தியோன் தெளிக்கப்படும் என்றார் இந் நடவடிக்கையினால் நுளம்பினால் பரவும் ஏனைய நோய்களான டிங்குக் காய்ச்சல், மூளைக்காய்ச்சல், யானைக்கால்நோய் போன்றவற்றை கூடிய அளவு குறைக்க முடியும் என அவர் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

மூன்றாவது கட்டமாக சுகாதாரப் பரிசோதனைக்கு செல்லும் குழுவினர் சகலரிடமிருந்தும் இரத்தம் பெறுவது தொடர்பாக பயிற்சி அளிக்கப்பட்டதுடன் இதன் மூலம் தாம் செல்லும் வீடுகளின் காய்ச்சல் நோயாளர்களின் இரத்தம் பெறப்பட்டு தற்போது யாழ். மாநகர சபை பகுதியில் இயங்கும் மூன்று பரிசோதனை நிலையங்களின் மேற்படி இரத்தம் பரிசோதனைக்கு எடுத்துக் கொள்ள...

# தலசீமியா நோய் இலங்கையில் அதிகரிப்பு

(கொழும்பு)

இலங்கையில் தலசீமியா நோயினால் பாதிக்கப்படுபவர்களின் தொகை அதிகரித்து வருவதாக வைத்திய வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. செங்குருதி சிறு துணிக்கைகள் அழிந்து இரத்தச்சோகை ஏற்படுவதே இந் நோயின் அறிகுறியாகும்.

இரத்த உறவு உள்ளவர்கள் தம்மிடையே திருமணம் செய்துகொள்வதுஇந்நோயை ஏற்படுத்தும்பிரதான காரணியாகும். தற்போது இத்தகைய நோயாளிகள் 550பேர் கண்டுபிடிக்கப்பட்டுள்ளனர். பிறக்கும்போதே இரத்தத்தில் காணப்படும் அசாதாரண நிலையே இந் நோயை ஏற்படுத்துகிறது. கல்லீரல், மண்ணீரல் என்பன வீங்குதல்...

இந் நோயினால் பீடிக்கப்பட்டோர் ஆயுட்காலம் சுமார் 15 வருடங்களால் குறைந்துவிடும் என வைத்தியர்கள் கூறுகின்றனர். இந் நோய் குருநாகல் பகுதியில் அதிகமாக காணப்படுவதையடுத்து குருநாகல் ஆஸ்பத்திரியில் இதற்கென தனியான பிரிவு ஒன்று திறக்கப்பட்டுள்ளது.

# கச்சதீவில் மீன்பிடி உரிமை; சிறிலங்காவுடன் பேச்சு நடக்கிறது

## இந்திய வெளியுறவு இணை அமைச்சர்

(டில்லி)

கச்சதீவுப் பகுதியில் இந்திய மீனவர்கள் மீன்பிடிப்பதற்கான பாரம்பரிய உரிமைகளை மீண்டும் உருவாக்குவது குறித்து சிறிலங்கா - இந்திய அரசுகளிடையே பேச்சுவார்த்தைகள் நடைபெற்றுவருவதாக இந்திய வெளியுறவு இணை அமைச்சர் ஆர். எல். பாட்டியா தெரிவித்தார். நேற்று மாநிலங்களவையில் இதைத்தெரிவித்த அவர்1974 இல் ஒப்பந்தத்தில் கச்சதீவில் மீன்பிடிக்க இந்திய மீனவருக்கு உரிமை அளிக்கப்பட்டிருப்பதையும் சுட்டிக்காட்டினார்.

இந்தியா-சிறிலங்கா கடல் எல்லையில் தமிழக மீனவர்கள் சிறிலங்கா கடற்படையால் சுட்டுக்கொல்லப்படும் சம்பவங்கள் மீண்டும் ஏற்படாதவகையில் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கை குறித்து இந்திய-சிறிலங்கா கடற்படை பிரதிநிதிகளிடையே இரு அரசுகளும் பேச்சுநடத்தி வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

தமிழக மீனவர்களுக்கு போதுமான அளவு பாதுகாப்பு அளிக்கவேண்டும் என நேற்று மாநிலங்களவையில் தமிழ்நாடு உறுப்பினர்கள் வற்புறுத்தினர். தி. மு. கவைச்சேர்ந்த விடுதலை விரும்பி சிறிலங்கா கடற்படையினர் பல தமிழக மீனவர்களை கொன்றிருப்பதாகக் கூறினார். சிறிலங்கா அரசுடன் இந்திய அரசு பேச்சு நடத்த வேண்டும் என காங்கிரஸ் உறுப்பினர் ஜெயந்தி நடராஜன் கோரினார்.

# பேராசிரியர் துரைராஜா பெயரில் தங்கப்பதக்கம்

(யாழ்ப்பாணம்)

பேராசிரியர் அ. துரைராஜா அவர்களின் பெயரில் யாழ். பல்கலைக் கழகத்தின் திறமையான மாணவர்களுக்கு தங்கப்பதக்கம் வழங்கும் திட்டம் ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

உயர் கல்வியில் ஈடுபடும் மாணவர்களை ஊக்கப்படுத்தும் முகமாக மேற்படி திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. இப்பல்கலைக்கழகத்தில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு திறமை அடிப்படையில் இத் தங்கப்பதக்கம் வழங்கப்படவுள்ளது.

வருடாவருடம் வழங்கப்படவிருக்கும் இத்தங்கப்பதக்கம் வழங்கும் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு வசதியாக நிதியம் ஒன்று உருவாக்கப்பட்டு வருகிறது. இந்த நிதியத்துக்கு ஏற்கனவே பலர் தமது அன்பளிப்புக்களை வழங்கியுள்ளனர். அன்பளிப்புகளை வழங்க விரும்புபவர்கள் யாழ். பல்கலைக்கழக பதிவாளருடன் தொடர்பு கொள்ளும்படி கேட்கப்பட்டுள்ளனர்.

# மருத்துவ பீடாதிபதியை தாக்குவதற்கு முயற்சி

(யாழ்ப்பாணம்)

யாழ் பல்கலைக் கழக மருத்துவ பீடாதிபதி மீது தாக்குதல் நடாத்த இப்பீடத்தைச் சேர்ந்த சிற்றூழியர் ஒருவர் முயற்சி செய்துள்ளார் என தெரியவருகிறது.

கடந்த 23 ஆம் திகதி மாலை நடைபெற்ற மேற்படி தாக்குதல் முயற்சி வேறொரு ஊழியரால் தடுத்து நிறுத்தப்பட்டதாக தெரிய வருகிறது. கடமையின் போது முறைகேடாக நடந்து கொண்டதைத் தொடர்ந்து மருத்துவ பீடாதிபதி இவ் ஊழியர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுத்தார் என்றும் இந்த நடவடிக்கையின் விளைவாகவே இத்தாக்குதல் முயற்சி மேற்கொள்ளப்பட்டதாகவும் கருதப்படுகிறது.

தாக்குதல் முயற்சியில் ஈடுபட்ட ஊழியர் மீது மேலதிக நடவடிக்கை எடுக்கும் முகமாக தற்பொழுதுவிசாரணைகள் பல்வேறு மட்டங்களில் நடைபெற்று வருவதாக யாழ். பல்கலைக் கழகத்தில் இருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## பிரிட்டிஷ் அன்பளிப்பின்

# மிகுதிப் பொருள்களையும் எடுத்துவர முயற்சி

(யாழ்ப்பாணம்)

பிரிட்டிஷ் அரசினால் யாழ் போதனா வைத்தியசாலைக்கு அன்பளிப்புச் செய்யப்பட்ட மருத்துவ உபகரணங்களில் மிகுதியான தொகுதியை யாழ்ப்பாணம் எடுத்துவர இரண்டு வைத்தியர்கள் கொழும்பில் தங்கியுள்ளனர்.

வைத்தியர் ராஜராஜேஸ்வரன், வைத்தியர் முரளீதரன் ஆகியோரே மேற்படி உபகரணங்களை யாழ்ப்பாணம் எடுத்துவரும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

தற்சமயம் கொழும்புத் துறைமுகத்தில் தரித்துள்ள ''வாதுவ'' கப்பலிலேயே இவை எடுத்துவர ஒழுங்குகள் நடைபெற்றுக்கொண்டிருப்பதாக தெரியவருகின்றது.

மேலும் இதைவிட யாழ். பிராந்திய சுகாதார வைத்திய அத்தியட்சகரின்கீழ் உள்ள யாழ். வைத்தியசாலைகளுக்கான மேற்படி மருத்துவ உபகரணங்களை எடுத்துவர தாமோதிரன் என்பவர் தற்சமயம் கொழும்பில் தங்கியுள்ளார் என தெரியவருகின்றது. (பா)

# மன்னார் தீவில் தீவிர தேடுதல் மக்கள் மத்தியில் பதற்றம்

(மன்னார்)

சிறிலங்கா இராணுவத்தினர் மன்னார் தீவுப்பகுதியில் மேற்கொண்ட...

இராணுவத்தினரின் சோதனை நடவடிக்கைகள் தொடர்ந்தும் நடைபெற்று...

...குக்கிடைத்த தகவல்கள் தெரிவிக்கின்றன. (க) (நி)

காங்கேசன்துறை கடற்படையால்

இதன் முதற்கட்டமாக மலேரியாநோய் வேகமாய் பரவிவரும் பகுதியும், மலேரியா நோயாளரின் பத்து வீதத்திற்கு மேல் மூளை மலேரியா நோயாளர் கண்டு பிடிக்கப்பட்டபகுதியும் தெரிந்தெடுக்கப்பட்டிருப்பதாகவும், இதற்கு சுழற்சி முறையில் மலத்தியோன்தெளிக்கப்படும் என்றும் இதன் ஆரம்ப கட்டமாக சாம்சன் முகாம் அரியாலை கிழக்கு, அரியாலை தென்கிழக்கு வசந்தபுரம், மணியந்தோட்டம், பூப்புகார் பகுதிகளுக்கு மலத்தியோன் தெளிக்கப்பட இருப்பதாகவும் தெரிவித்தார்.

இரண்டாம் கட்டமாக சாதாரண மலேரியா நோய் காணப்படும் இடங்களில் சுகாதாரக்குழுக்களை அமைத்து நுளம்பு பெருக்கத்தைக் கட்டுப்படுத்தும் செயல்பாடுகளை செய்ய இருப்பதாகவும் இதில் ஐந்து குழுக்கள் செயல்படும் என்றும் இவர்கள் நாளாந்தம் சுமார் முப்பது வீடுகளுக்குச் சென்று இது தொடர்பான நடவடிக்கைகளில் ஈடுபடுவார்கள் என்றும், இவர்கள் இவ்வாறு செல்லும்போது மலேரியா நோயாளர் ஒரு குறிப்பிட்ட தொகையைவிட அதிகமாகக்காணப்பட்டால் அப்பகுதியில் இருந்து சுமார் ஒரு கிலோ மீற்றர் தூரத்திற்கு மலத்தியோன்தெளிக்கப்படும் தொடர்பாக பயிற்சி அளிக்கப்பட்டதுடன் இதன் மூலம் தாம் செல்லும் வீடுகளின் காய்ச்சல் நோயாளர்களின் இரத்தம் பெறப்பட்டு தற்போது யாழ். மாநகர சபை பகுதியில் இயங்கும் மூன்று பரிசோதனை நிலையங்களின் மேற்படி இரத்தம் பரிசோதனைக்கு எடுத்துக் கொள்ள முடியும் என்றார். இந் நடவடிக்கை மூலம் இந்தநோய் ஆரம்பத்திலேயே மட்டுப்படுத்தக்கூடியதாக அமையும்என அவர் மேலும் தெரிவித்தார்.

## மலசலகூடங்கள் அமைக்கப்படும்

(குருநகர்)

ஜேர்மன் உதவித் திட்டத்தின் கீழ் சண்டிலிப்பாய் பிரதேசச் செயலர் பிரிவிலுள்ள இடம் பெயர்ந்தவர்கள் முகாம்களில் 46 மலசலகூடங்கள் அமைக்கப்பட இருக்கின்றன.

சண்டிலிப்பாய் பிரதேச செயலகம் வழங்கும் நிதியைக் கொண்டு யாழ். மறைவட்ட மனித முன்னேற்ற நடு நிலையம் மானிப்பாய் பிரதேசத்திலுள்ள இடம்பெயர்ந்த குடும்பங்கள் தங்கியுள்ள குடிசைகளைப் புனரமைத்து வருகிறது. (21)

தம்மிடையே திருமணம் செய்துகொள்வதுஇந்நோயை ஏற்படுத்தும்பிரதான காரணியாகும். தற்போது இத்தகைய நோயாளிகள் 550பேர் கண்டு பிடிக்கப்பட்டுள்ளனர். பிறக்கும்போதே இரத்தத்தில் காணப்படும் அசாதாரண நிலையே இந் நோயை ஏற்படுத்துகிறது. கல்லீரல், மண்ணீரல் என்பன வீங்குதல், உடல் வெளிறல், உடல் வளர்ச்சி குன்றல் என்பன இந் நோயின் அறிகுறிகளாகும்.

யாழ் போதனா வைத்தியசாலை

## ஊழியர் சம்பளத்திற்கு மட்டுமே நிதி ஒதுக்கீடு

(யாழ்ப்பாணம்)

சென்றமாதம் யாழ் போதனா வைத்தியசாலை ஊழியர்களின் சம்பளத்திற்கு மட்டும் தான் சுகாதார அமைச்சினால் நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் ஏனையவற்றிற்கு நிதி ஒதுக்கப்படவில்லை எனவும் யாழ் போதனா வைத்தியசாலைக் கணக்காளர் வே. சபாநாதன் தெரிவித்தார்.

இதனால் ஏனைய சேவைகள் ஸ்தம்பிதம் அடையும் நிலையில் உள்ளதாகவும் திட்டமிட்டு சிறிலங்கா அரசு சில அழுத்தங்களை யாழ் போதனா வைத்தியசாலையின் மீது மேற் கொள்ளப்பார்க்கின்றது எனவும் அவர் தெரிவித்தார்.

இருந்தும் நாம் எமது வைத்தியசாலைக்கு தேவைப்படும் நிதியைப் பெறுவதற்கு நடவடிக்கை எடுத்து வருகின்றோம். எனினும் அந் நிதி மிகவிரைவில் கிடைக்கும் என்பது சொல்ல முடியாது எனவும் தெரிவித்தார். (பா)

சிறிலங்காவிற்கு

அறிக்கை சீன - சிறிலங்கா பொருளாதார வர்த்தக ஒத்துழைப்பு அதிகரிக்கப்படும் எனக் கூறியது எனவும் பி. பி. ஸி. செய்தியாளர் சுட்டிக் காட்டினார்.

இதேசமயம் சீனா இலங்கையில் நடக்கும் உள்நாட்டுப் போர் சர்வதேச மத்தியஸ்தம் இன்றி தீர்க்கப்பட வேண்டும் என விரும்புகிறது, என சிறிலங்கா அரசிற்கு எடுத்துக்கூறியுள்ளது. தென்னாசியாவில் முரண்பாடுகள் அமைதியாக தீர்க்கப்படவேண்டும் என சீனா தனது விருப்பத்தைத் தெரிவித்துள்ளது எனவும் பி. பி. ஸி. குறிப்பிட்டது.

# மன்னார் தீவில் தீவிர தேடுதல் மக்கள் மத்தியில் பதற்றம்

(மன்னார்)

சிறிலங்கா இராணுவத்தினர் மன்னார் தீவுப்பகுதியில் மேற்கொண்ட சோதனை நடவடிக்கைகளின்விளைவாக அப்பகுதியில் பெரும் பதற்ற நிலை தோன்றியுள்ளது.

இராணுவத்தினரின் சோதனை நடவடிக்கைகள் தொடர்ந்தும் நடைபெற்று வருவதால் அங்கு தோன்றிய பதற்றநிலையும் தொடர்ந்து பல வாரங்களாக நீடித்து வருகிறது.

இவ்வாறு நீண்ட நாட்களாக நீடிக்கும் பதற்றநிலை காரணமாக மன்னார் தீவுப் பகுதியில் வாழும் முஸ்லிம் மக்கள் இப்பகுதியைவிட்டு வெளியேறும்நிலை தோன்றியுள்ளது. இப்பதற்றநிலை காரணமாக அதிகம் பாதிக்கப்பட்ட முஸ்லிம்கள் ஏற்கனவே அப்பகுதியை விட்டு வெளியேறிவிட்டனர் என்றும் தொடர்ந்தும் பலர் இவ்வாறு வெளியேறி வருவதாகவும் மன்னார் தீவில் இருந்து எமக்குக்கிடைத்த தகவல்கள் தெரிவிக்கின்றன. (க) (நி)

## ரிஷ்வியின் வாகனம் மீது இனம்தெரியாதோர் சூடு

(கொழும்பு)

மட்டக்களப்பு முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ரிஷ்வி சின்னலெப்பையின் ஜீப் வண்டிமீது இனம் தெரியாதவர்கள் துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொண்டதாகத் தெரியவருகின்றது.

மேற்படி முன்னாள் உறுப்பினர் காத்தான்குடிப் பகுதியில் சென்றுகொண்டு இருக்கும்போது இச்சம்பவம் நடைபெற்றதாகவும் இதில் இரண்டு பொலிஸாரும் ஜீப் சாரதியும் காயமடைந்துள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

புற்றுநோயாளர்

போக்குவரத்து சிரமத்தின் மத்தியில் கொழும்புசெல்லும் நோயாளர் சிகிச்சை பெற்று வைத்தியசாலையை விட்டு வெளியேறியபின்னர் அடுத்து சிகிச்சைக்கு செல்லவேண்டிய நாள்வரை தங்க இடமின்றியும், திரும்பி வந்து செல்ல முடியாமையால் ஏற்பட்ட நிலையை யாழ். புற்று நோயாளர் சங்கம் மேற்படி விடயம் குறித்து லண்டன் சங்கத்திற்கு சுட்டிக் காட்டியதற்குஅமைய லண்டன்சங்கம் இதற்கான முடிவை எடுத்துள்ளதாக தெரிய வருகின்றது.

இதற்கான ஒழுங்குகள் தற்போது துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருவதாக மேலும் தெரியவருகின்றது (நி)

## 15 ஆம் ஆண்டு நிறைவு விழா

(தொல்புரம்)

தொல்புரம் செல்வா சனசமூக நிலையத்தின் 15 ஆம் ஆண்டு விழா இன்று மாலை 3.00 மணியளவில் செல்வா விளையாட்டு மைதானத்தில் நிலையத் தலைவர் சு. பரன் தலைமையில் நடைபெறவுள்ளது. விழாவில் சிறப்பு நிகழ்வாக நடனங்கள், பட்டிமன்றம், வில்லிசை மற்றும் ''குயில் கூவ மறந்ததேன்'', 'இனியொரு விதிசெய்வோம்' ஆகிய நாடகங்களும் இடம் பெறவுள்ளன. (41)

காங்கேசன்துறை கடற்படையால்

## தடுத்து வைக்கப்பட்டவர் மாலையே விடுதலை

(வடமராட்சி)

காங்கேசன்துறையில் நேற்று முன்தினம் காலை நடைபெற்ற பயணிகள் சோதனையின்போது சந்தேகத்தின் பேரில் தடுத்து நிறுத்தப்பட்ட உத்தியோகத்தர் ஒருவர் நேற்று முன்தினம் மாலை 4-00 மணிக்கு விடுவிக்கப்பட்டார்.

மதுவரி உத்தியோகத்தரான சடாட்சரம் - றெஜிபுவனேந்திரன் (வயது33) என்பவரே தடுத்து நிறுத்தப்பட்டு விடுவிக்கப்பட்டவர் ஆவார்.

'நரோமா' கப்பல் மூலம் வந்த பயணிகள் சோதனைகளின் போது அடையாள அட்டை மீது ஏற்பட்ட சந்தேகத்திலேயே இவர் தடுத்து வைக்கப்பட்டார். பின்னர் உயர் அதிகாரிகளின் தலையீட்டையடுத்து விடுவிக்கப்பட்டார். (யோ)

## அச்சுறுத்தல் மத்தியில் கிழக்கு தேர்தலில் போட்டி

(கொழும்பு)

கிழக்கு மாகாணத்திலும் வவுனியாநகரசபைக்கு நடைபெற்ற தேர்தல் அரசாங்க பயங்கரவாதம், மற்றும் அச்சுறுத்தல் மத்தியில் தனது கட்சி போட்டியிட வேண்டி இருந்ததாக சுதந்திரக்கட்சி வெளியிட்டுள்ள தேர்தல் முடிவு தொடர்பான அறிக்கையில் தெரிவித்துள்ளது.

பயங்கரவாத அச்சுறுத்தல் தான் தனது கட்சியை சின்னத்தில் ஒரு சில பகுதியில்போட்டியிட்டதாகவும் இதேவேளை வவுனியா நகரசபையில் ஜனநாயக மக்கள் விடுதலைமுன்னணியின்வெற்றி மகிழ்ச்சியை தருவதாக தெரிவித்தார்.

இதேபோன்று எதிர்கால தேர்தலில் விடுதலைப் புலிகளும் போட்டியிட வேண்டுமென்று தான் எதிர்பார்ப்பதாக தெரிவித்தார்.

இதேவேளை நடந்து முடிந்த கிழக்குமாகாண மற்றும் வவுனியா நகரசபை உள்ளூராட்சி தேர்தல் ஆனது ஓர் கண்துடைப்புநாடகம்ஒன்றை அரசாங்கம் உலகுக்கு ஆடியது என்றே கொள்ள முடியும் என நவசமசமாஜக் கட்சி அரசியல் பீடத்தின் சார்பில் அதன் பொதுச் செயலாளர் விக்கிரமபாகு கருணாரட்ன தெரிவித்தார்.

இத்தேர்தலில் சுதந்திர கட்சிபோட்டியிட்டது ஏற்றுக்கொள்ள கூடிய சம்பவம் இல்லை என்றும், அரசாங்கத்தின் இவ் கண்துடைப்பு நாடகத்திற்கு சுதந்திரக் கட்சியும் பக்க துணையாக இருந்ததாக கருத முடியும் என தெரிவித்தார்.

## அடுத்த வாரம் வாதுவ புறப்படும்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்திற்கான ஒரு தொகுதி உணவு மற்றும் பொருள்களுடன் 'வாதுவ' கப்பல் எதிர்வரும் 11ஆம் திகதி அல்லது 12 ஆம் திகதி கொழும்புத் துறைமுகத்தில் இருந்து பருத்தித்துறை நோக்கி புறப்படவுள்ளதாக யாழ். அரசஅதிபர் கா. மாணிக்கவாசகர் தெரிவித்தார்.

பிராந்திய சுகாதார வைத்தியஅத்தியட்சகரின்கீழ் உள்ள யாழ். வைத்தியசாலைகளுக்கான மேற்படி மருத்துவ உபகரணங்களை எடுத்துவர தாமோதிரன் என்பவர் தற்சமயம் கொழும்பில் தங்கியுள்ளார் என தெரியவருகின்றது. (பா)

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

### 2-3-1994

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்:- 1019

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:-

42-6728, 22-2250, 28-4550, 40-1714, 42-2355, 26-2108, 41-9355, 26-0536, 26-1583, 27-5912, 40-1688, 26-4281, 28-7362, 41-9058, 24-8429, 40-7299, 26-7307, 28-1754, 26-1349, 24-6941, 26-0375.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:-

26-6077, 28-7978, 26-9158, 27-5045 27-7537, 26-6472, 27-5863, 26-9495, 24-6211, 24-0878, 24-6533, 24-6811, 27-9772, 27-6493, 24-3071.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் [illegible] வீதி 81-ஆம் இலக்கத்திலுள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1994 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 03 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.